
# வெள்ளிமலை

இதழ் : 04 ஆவணி 2008

50/=



பவள விழா நாயகர் சிற்பி

# KUMARAN BUILDERS

*Engineers, Consultants and Conntractors*

Reg.Vs/BR/175-ICTAD-9078

26, Meenachchi Amman Kovil Road,
Uduvil North,
Chunnakam.



குழியலறைகள்/ கழிப்பறைகள்
நவீன முறையில் கட்டுவதற்கு
புதிய வீடு நவீன முறையில்
கட்டுவதற்கு பழைய
கட்டிடங்களை
புனரமைப்பு
செய்வதற்கு நீர்குழாய்
பொருத்து வேலைகள் அலுமினிய
வேலைகள் மின்னிணைப்பு
வேலைகள் செய்வதற்கு





நீதியான கூலியில் கால இழுத்தடிப்பு
இல்லாமல் செய்து முடிப்பதற்கு நீங்கள்
நாட வேண்டிய ஒரே இடம்



# KUMARAN BUILDERS



# வெள்ளிமலை

வலிகாமம் பிரதேச வளங்கள், திறன்கள் வெளிக்காட்டிடும் சஞ்சிகை

மலை : 01 ஆவணி 2008 வெள்ளி : 04


இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வுவேண்டில்
புத்தக சாலைவேண்டும் நாட்டில்யாண்டும்
- பாவேந்தர் பாரதிதாசன் -


வலிகாமம் தெற்கு பிரதேச
வாசகர் வட்ட வெளியீடு

இணை ஆசிரியர்கள்
க. சௌந்தரராஜன்
கு. பா. விஜயகுமார்

ஆசிரியர் குழு
திரு. அ. தற்பரானந்தன்
திரு. ஐ. இராமசாமி
திரு. சு. ஸ்ரீகுமரன்
திரு. ப. சிவானந்தசர்மா
திரு. சி. றமேஷ்
திரு. கு. றஜீபன்
செல்வி. ஸ்ரீ. ஸ்ரீரங்கநாயகி

அட்டைப்பட ஓவியம்
திரு. வ. பாலமுருகன்
(விரிவுரையாளர், சித்திரமும் வடிவமைப்பும் துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

தொடர்புகளுக்கு
வெள்ளிமலை
சுன்னாகம் பொதுநூலகம்
சுன்னாகம்.

அச்சுப்பதிப்பு
கிருஷ்ணா பிறிண்டேர்ஸ்,
டாக்டர். சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.



இச்சஞ்சிகையில் வெளியாகியுள்ள
ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே
பொறுப்பாளிகளாவர்.


## மலைமீதிலே


எண்ணச்சாரல் 02
கடவுள் நம்பிக்கை - *பிறை* 03
செய்தித்தாள் படிப்பது - *செ. ரவிசாந்* 05
நூலின் பரிணாமம் - *பா. ஜசோதா* 06
புதிய தலைமுறையின் முளைகள் 07
- *சோ. பத்மநாதன்*
அன்றைய அச்சுப்பதிவு - *ம.க. ஸ்ரீதரன்* 08
உள்ளூராட்சியின் உன்னத சேவை 11
- *ஜெ. பாரதி*
ஊக்குவிப்போம் உள்ளூராட்சியை 12
- *த. கல்யாணி*
நுகர்வோரை நோக்காதவியாபாரங்கள் 13
- *கோப்பாய் சிவம்*
விந்தைப்பூக்கள் - *சி. அமிர்தநாதன்* 15
கலைச்செல்வியின் சிற்பி 16
- *சு. ஸ்ரீகுமரன்*
நீலப்பூக்கள் 20
- *உடுவில் சக்தி தியாகராசா*
கவிதையின் கருமுளைகள் 22
- *கு. றஜீபன்*
உஸ்மான் செம்பேன் - *S. T. அருள்* 24
கமலனும் விமலனும் - *சின்னண்ணா* 25
ஏழாலை சைவ மகாஜனநூலகம் 28
- *ந. சுப்பிரமணியம்*
பாடசாலையில்5E - *சொ. ஹரிசங்கர்* 31
சிறுகதை - உரைப்பு - *வ. பாலமுருகன்* 34
அகிலம் காட்டும் அகல்விளக்கு 38
- *இ. கணேசராசா*
பன்னுதமிழ் சொன்ன முருகேச பண்டிதர் 40
- *சி. றமேஷ்*
மண்ணின் இசை - *கலைத்தாசன்* 46
தேர்த் திருவிழா - *S.T. குமரன்* 49
காற்று - *இயல்வாணன்* 53

# எண்ணச்சாரல்

## வணக்கம் வாசக நெஞ்சங்களே! வணக்கம்

2006 தேசிய வாசிப்பு மாத நிகழ்வின்போது 'வெள்ளிமலை' கையெழுத்துச் சஞ்சிகையாக மலர்ந்தது. இரு கையெழுத்து இதழ்கள் வெளிவந்த நிலையில், 2007 ஜூலை மாதம் உள்ளூராட்சி வார நிகழ்வின்போது ஒருவித தயக்கத்துடன்தான் அச்சுப் பிரதியாக முதல் இதழை வெளிக் கொணர்ந்தோம். ஓராண்டு பூர்த்தியான நிலையில், புதுப்பொலிவுடன் புதிய அம்சங்களுடன் நான்காவது இதழை வெளியிட்டுள்ளோம்.

பிரதேச மண்ணில், விதையாக நாட்டப்பெற்ற வெள்ளிமலை, இதழுக்கு இதழ் மெருகேறி, உங்களின் மகத்தான ஆதரவுகளுடனும் ஆசிகளுடனும் கிளை பரத்தி, இதழ் விரித்து நிற்கின்றது. நன் மண்ணின் வீரிய உரமாக உங்களின் ஆதரவும், இலக்கியச் சமூகம், கல்விச் சமூகம், வர்த்தக சமூகம், வாசகர் சமூகம் எனப் பல்லோரினதும் வரவேற்பும் பங்களிப்புகளும் உயிர்தரு நீராகவும், துறைசார்ந்த ஆலோசனைகள், உதவிகள் ஒளியாகவும் அமைந்து வெள்ளிமலை வளரத் துணை செய்கின்றன.

யாபேருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகின்றன. மக்களின் பங்கேற்பு உள்ளூராட்சி சேவைகளின் அடிநாதமாகும். மக்களுக்காக, மக்களால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகளே இச் சேவையை உன்னத சேவையாக நிலை நிறுத்தி மேம்படுத்துகின்றன. உள்ளூராட்சி மறுசீரமைப்புத் திட்டங்களினூடாக இச் சேவைகள் புதுமெருகும் பயனுறுதியும் மிக்கனவாகிட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

வளங்களும் திறன்களும் சாதனைகளும் நிறைந்த இவ் வலிகாமத்தின் சிறப்புக்களை வெளிப்படுத்தும், ஊக்கப்படுத்தும் செயல்களைப் பேணி வளர்க்கும் பெரும் பொறுப்பு என்றும் நம் எல்லோருக்கும் அல்லவா.

### தேசிய வாசிப்பு மாதம் ஒக்ரோபர் 2008

*தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி வலி. தெற்கு பிரதேச வாசகர் வட்டம் நடாத்தும் பலவகையான போட்டிகளின் விபரங்களை சுன்னாகம், உடுவில், ஏழாலை பொதுநூலகங்களில் அறியலாம். மாணவர்களுக்கும் பொது வாசகர்களுக்கும் தனித்தனியே நடாதப்படவிருக்கும் போட்டிகளில் பங்குபற்றி வென்று பரிசில்கள் பெறுங்கள். பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் மாணவச்செல்வங்களின் பெற்றோர், பாதுகாவலர்களும் உங்கள் பிள்ளைகளை போட்டிகளில் கலந்து கொள்ள ஊக்கப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.*

### வாசிப்பு மாதச்சலுகை

*15 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபரின் சிபார்சுடன் வலி. தெற்கு பிரதேச நூலகங்களின் சிறுவர் நூலக அங்கத்துவத்தை ஓராண்டு காலத்துக்கு ரூபா 100 மட்டும் செலுத்தி பெற முடியும். பொதுநூலகங்களுடன் தொடர்பு கொள்க.*

**வாசிப்பு மாதத்தையொட்டி நூலகங்களில் ஒக்ரோபர் 1ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை கிடைத்தற்கரிய பழைய, புதிய பல்துறை நூல்கள், சஞ்சிகைகள் வாசகர்களின் இலகு பாவனைக்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். வருக! வாசித்துப் பயன் பெறுக!**



"சிறப்பெனும் செம்பொருள் காண்பது அறிவு" என்கிறார் தெய்வப்புலவர். அவர் மேலும் "ஓர்துள்ளம் உள்ளது உணரின்" என்றும் கூறுகிறார். கடவுளைச் சிந்தித்து உணர ஒருவனுக்கு இயலுமாயின் அவனுக்கு மெய்யுணர்வு ஏற்பட்டுவிட்டது என்பதே உண்மை. வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்துவிட்டால் ஒருபோதும் இடும்பை இல்லை என்பதை உணர்ந்துவிட்டான். அவனுக்கு இருவினைகளும் ஒன்றும் செய்யமாட்டா. எனவே அவன் நிம்மதியாக வாழ்வான் என்பதில் அறநூலார்க்கும் உடன்பாடு உண்டு. ஆதிபகவன் முதற்றே உலகு என்பதை அவன் திடமாக நம்புகிறான். இந்தப்பிரபஞ்சம் முழுவதையும், மனிதனையும் படைத்தும், காத்தும், அழித்தும் வரும் ஒரு சக்தி உண்டு என்றும், மனிதனின் உடம்பு அழிந்த பின்பும் ஆத்மா நிலைக்குமென்றும் மாறாத நம்பிக்கை அவனுக்குண்டு. அவன்தான் ஆஸ்திகன், பக்தன், இறையடியான்.

யானைக்குத் தும்பிக்கை பலம். மனிதனுக்கு நம்பிக்கை பலம். "நம்பிக்கையால் மலையைக்கூட நகர்த்தலாம்" என்றார் யேசு பிரான். நம்பிக்கை அத்தனை பலம் பொருந்தியது. இறைவன் எங்குள்ளான்? அவன் நீக்கமற எல்லாவற்றிலும் எம்மிலும் உள்ளான்.

# கடவுள் நம்பிக்கை

– பிறை –

"விறகுத்தீயினன் பாலிற்படு நெய்போல்" இறைவன் எம்மில் கலந்துள்ளான். தீக்கோல்களைக் கடையும்போது தீ வெளிப்படுகிறது. பாலைக் கடையும்போது நெய் வெளிப்படுகிறது. மேலும் பைபிள், குர்ஆன் போன்ற நூல்களிலும் இறைவன் மனிதனுக்கு மிகவும் நெருக்கமாக உள்ளான் என்று கூறப்படுகிறது. நாம் தீங்கிழைக்கும் சமயங்களிலும், சில முடிவுகள் எடுக்கும்போதும் எமக்குள் ஒரு குரல் கேட்பதை யாவரும் உணரமுடியும். அதைத்தான் மனச்சாட்சி என்று கூறுவர். அந்த மனச்சாட்சிதான் 'கடவுளின் குரல்' என்கின்றார் சாயிபாபா . அதன்படி நடப்பின், அதை வளர்ப்பின் எம்மில் தெய்வத்தன்மை ஓங்கி மிளிரும். ஒருவருக்கும் ஒரு பொல்லாப்பும் இல்லை.

கடவுள் ஒன்றா? பலவா? இதற்கு இருக்கு வேதம் என்ன கூறுகிறது என்று பார்ப்போம். "ஏகம் ஸத் விப்றா பஹூதா வதந்தி" என்கின்றது. அதாவது, "உள்ள பொருள் ஒன்று அதைப் பெரியோர் பலவாறு நவில்கின்றனர்" என்கின்றது. திருமூலர் கூறுகின்றார். "ஒருவனே தேவன்" என்று. அருணந்தி சிவாச்சாரியாரும் "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்" என்பதாகச் சொல்லியுள்ளார். இக்கருத்துப்படவே கீதையிலும் கிருஷ்ண பகவான் பின்வருமாறு கூறுகின்றார். "எவர்கள் எவ்வாறு என்னை நாடுகிறார்களோ அவர்களுக்கு அவ்வாறே நான் அனுக்கிரகிக்கின்றேன். பார்த்தா! மனிதர்கள் எவ்வகையிலும் என்னுடைய வழியையே அனுசரிக்கின்றார்கள்" என்று. கடவுளின் வியாபகத்தைப் பற்றி அவர் கூறும்போது, "பிரமம் எனப்படுவது அது எங்கும்

கைகால்களை உடையது, எங்கும் கண்ணும், தலையும், வாயுமுடையது, எங்கும் காதுகளை உடையது. உலகமனைத்தும் வியாபித்துள்ளது" என்கிறார்.

'கடவுள் இல்லை, காணமுடியாது, நான் நம்பவில்லை' என்று ஒருவர் கூறினால் அதற்கு நாம் அவரின் பரிதாப நிலைக்கு வருந்தத்தான் முடியும். அது அவரின் விதி. ஆந்தைக்கு சூரியனையே, தெரியாதாம். பகற்குருடு. அதைப் போன்றுதான் அவர்களும். கடவுளைத் தேடுபவர்கள் பூமியில் நடந்துகொண்டு பூமியை தேடுபவர்கள். மலையில் நின்றுகொண்டு மலையைத் தேடுபவர்கள்.

இந்தக் கள்ளப்புலனனைத்தும் வஞ்சனையைச் செய்ய அதையும் சமாளித்து இந்த விலங்கு மனத்துடன் போராடிக் காமம் என்னும் முதலையின் வாயில் அகப்படாமல், மனிதன் வாழ்ந்து களைத்து பரிபூரணமான எல்லாம் வல்ல தித்திக்கும் தேனான ஒரு சக்தியிடம் தன்னை ஒப்படைக்கின்றான். இவன் ஓர் அடி செல்ல, அந்தச் சக்தி பத்தடி முன்வந்து அவனை ஏற்றுக்கொள்கிறது. இதுதான் சரணாகதி. இந்நிலையை அடைய உமாபதி சிவாச்சாரியார்

"பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவும் இனி
நீயொன்றுஞ் செய்யாது நில்"

என்று கூறுகின்றார். ஒன்றும் செய்யாமனில் என்பதுதான் அருணகிரியார்க்கு முருகப்பெருமான் சொன்ன மொழியான "சும்மாயிரு". இந்த பக்குவநிலை ஏற்பட நாம் வலிந்து செயற்படமுடியாது. அது எப்போது, எங்கே, எதனால் சித்திக்கும் என்று கூறமுடியாது. "புல் தானாக முளைப்பது போல் இந்த நிலையும் தானாக ஏற்படும்" என்கின்றார் ஓஷோ பகவான்.

சரணாகதி அடைய எமது முனைப்பு ஒழிய வேண்டும். தளைகளை நீக்க வேண்டும். யேசுபிரான் தனது சீடர்களுக்கு "யாதொருவன் என்னிடத்தில் வந்து தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரர்களையும் சகோதரிகளையும் தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் என் சீடனாகமாட்டான்" என்கிறார். இதைத்தான் கீதையிலும் பகவான் "மக்கள் மனையாள் முதலியவற்றில் பற்று அபிமானம் இன்மை வேண்டும்" என்று கூறுகின்றார். இதுதான் முழு நம்பிக்கை. இதற்கு இறைவனின் சித்தம் கூடிவர வேண்டும். நாம் மேலே கண்ட கீதை கூற்று, யேசுபிரானின் உரை என்பவைகளுக்கு இணங்க எத்தனையோ முன்னுதாரணங்கள் நடைபெற்றுள்ளன. முதலாவது சுவாமி இராகவேந்தர் வாழ்வில் நடைபெற்றது. மனைவியைப் பிள்ளையைத் துறந்தார். இரண்டாவது சுவாமி விவேகானந்தர் தாய், தந்தை, சகோதரங்களைத் துறந்தார். மூன்றாவது நல்லூரில் சடையம்மா சென்ற நூற்றாண்டில் முருகனின் கூற்றுக்கிணங்க தனது கணவரையும், பால்குடிக்கும் பிள்ளையையும் துறந்தார்.

இல்லற வாழ்வில் இருந்து கொண்டே தாமரை இலையில் நீர்போல் வாழ்ந்து முத்தியடைந்த நாயன்மார்,ஆழ்வார்கள் பற்றியும் நாம் அறியக் கூடியதாகவுள்ளது. நாம் செய்ய வேண்டியது மாசிலா மனதுடன் திருவருளை முன்விட்டு நாம் பின் சென்று கொண்டு மெய்யறிவுடன் சிந்தித்து பலனை எதிர்பாராது பழியஞ்சிக் கடமை புரிந்து உழைத்து, பகுத்துண்டு, உறங்கி , குளித்து, உடுத்து, அவன் தாள்களைப் பற்றிக் கொண்டு எமக்கென்ன என்று வாழ்வதுதான்! ■



## அன்னைக்கோர் அஞ்சலி



### சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

முன்னை நாம்புரி புண்ணியத் தாய்
தங்கமெனத் தரணிமிசை உதித்தாய்
அன்னை யென அரவணைத் தாய்
அறப்பணி அருட்பணி யாற்றுவித்தாய்
பின்னை பணி செய்வத ற்கும்
பேரன்பு பூண்டோரைப் பயிற்றுவித்தாய்
நின்னை மனத் திருத்தி னோமே
நினைவாலும் நற்பணி நிகழ்த்துமாறே

*- வெள்ளிமலை*

## செய்தித்தாளைப் படிப்பது சிறந்த பழக்கம் அறிந்திடு

செ. ரவிசாந்



செய்தித் தாளைப் படிப்பது
சிறந்த பழக்கம் அறிந்திடு
மெய்பொய் நிலைமை மேவியே
மெத்தச் சொல்லும் உணர்ந்திடு

நாளும் வெளி வந்திடும்
நான்கு திசையும் உரைத்திடும்
தாளில் உலகைக் காட்டிடும்
திறனை வியந்து படித்திடு

அழகு எளிமை வர்ணமென
அருமை உருவில் பலவிதமாய்
பழமை புதுமை வகைப்பட்டு
பகரும் செய்தி தந்திடும்

வியக்க வைக்கும் விஞ்ஞானம்
விந்தை யாகும் மெய்ஞ்ஞானம்
நயக்க வைக்கும் இலக்கியங்கள்
நாளும் தந்திடும் தாள்களே

விரும்பும் நல்ல விளையாட்டு
வேடிக்கை வினோதக் களிப்பூட்டு
அரும்பும் நல்ல அறிவாக்கம்
அருமைத் தாளே உருவாக்கும்

கலைகள் நயக்கச் செய்திடும்
கதைகள் கவிகள் பேசிடும்
மொழியின் பெருமை உணர்ந்திட
தாளின் துணையே பெரிதாகும்

பொழுதைப் போக்கவும் படித்திடணும்
புதுமை பார்க்கவும் படித்திடணும்
விழுதாய் வாழ்வை உயர்த்திடவே
விரும்பித் தாளைப் படித்திடு. ■

# நூலின் பரிணாம வளர்ச்சி.....

பா. ஜசோதா B.A (Hons)

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

துருக்கியர் கொன்ஸ்தாந்தி நோபிளை கைப்பற்றியமையும், அதனால் புத்தகங்கள் ஐரோப்பாவிற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே மறுமலர்ச்சி ஏற்பட்டதும், நூல்களின் வளர்ச்சியில் குறிப்பிடப்பட வேண்டிய விடயங்களாகும். அதன் காரணமாக ஐரோப்பி யருக்குச் சிந்திக்கும் தன்மை ஏற்பட்டு விஞ்ஞான ரீதியான புரட்சி ஏற்பட்டது. நூல்களைச் சேகரிக்கின்ற வழக்கம் பழைய உரோம, கிரேக்க மக்களிடம் காணப்பட்டது. கீபுறு புத்தகங்கள் இரவல் கொடுக்கப்படுவதும், விற்கப்படுவதும் அக்கால வழக்கில் இருந்தது. அரிஸ்ரோற்றலிடம் பெரியதொரு நூல் நிலையம் இருந்ததாகவும், கி.மு 300ம் ஆண்டளவில் அலெக்சான்டிறியாவில் ஒரு நூல்நிலையம் இருந்ததாகவும் இந்தியாவில் நாலந்தா பல்கலைக்கழகம், தலை சிறந்த இந்துக் கோயில்கள், ஆதீனங்கள், மடங்கள் மற்றும் புத்த, சமண மத ஸ்தாபனங்கள் ஆகிய இடங்களிலும் நூல் நிலையங்கள் இருந்ததாகவும் அறியப்படுகின்றன. இதற்கு, தேவாரங்கள் சிதம்பரத்தில் பூட்டி வைக்கப்பட்டு இருந்தமை சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின்போது இந்தியாவில் உள்ள சில சிறந்த ஏடுகள் இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. அரோன் என்ற புத்தக வியாபாரி இத்தாலியில் பல புத்தகங்களை விற்பனை செய்ததாகக் கூறப்படுகின்றது. இவ்வாறாகப் புத்தகங்கள் உருவாக்கப்பட்டு வியாபார நோக்கிலும், நூல் நிலையங்களிலும் உபயோகிக்கப்பட்டன.

புத்தகம் அச்சிடுவதில் ஜேர்மன் நாடு மிகவும் அதிக ஆர்வத்தைக் காட்டியது. அங்கு வர்த்தக ரீதியாகவும் புத்தகங்கள் அச்சிடப்பட்டதுடன் நவீனங்கள் (நாவல்கள்) மற்றும் சமய சம்பந்தமான நூல்களும் அச்சிடப்பட்டன. புத்தக வெளி யுறைகளில் பூக்கள் போன்ற அலங்காரங்களும் செய்யப்பட்டன. இவ்வாறாக அச்சுத் தொழிலில் மிகவும் திறமையாகத் தொழிற்பட்டது ஜேர்மன் நாடேயாகும். சுவிற்சர்லாந்தும் திறமையை வெளிப்படுத்தியது. பிரான்ஸ் பிரதேசத்தின் வெளியீடுகள் உன்னதமாக இருந்தபோதும் அவை விலை கூடியனவாகவும் இருந்தன. பெல்ஜியமும் புத்தகம் அச்சிடுவதில் ஈடுபட்டது. கொலன்டிலும் தனியார் அச்சகங்கள் காணப்பட்டன. சுவீடன் பிரான்ஸைப் பின்பற்றியது. ஸ்பெயின், இத்தாலி போன்றவையும் முன்னேற்றத்தைக் காட்டின. சோவியத்து ஒன்றியம் மிகவும் உபயோகமான பங்களிப்பை நல்கியுள்ளது. அதாவதுபுத்தகங்கள் மலிவாக அங்கு கிடைத்தன. பதினான்காம் நூற்றாண்டளவில் இங்கிலாந்தில் புத்தக விற்பனை சம்பந்தமான சட்டங்கள் இயற்றப்பட்டன. அமெரிக்காக் கண்டத்தைப் பொறுத்தவரையில் நூல்களின் விற்பனை விஷேடமான ஆர்வத்திற்கு உரியதாகும். ஸ்பானியக் குடியேற்றத்துடன் அவர்களின் அச்சுத்திறமைகளும் அங்கு குடியேறின. மெக்சிக்கோவைப் பொறுத்த வரையில் 1538ல் அச்சகம் ஏற்படுத்தப்பட்டு அங்கு பல புத்தகங்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன.


ஐக்கிய அமெரிக்கா நாடுகளில் 1638 அளவில் ஆங்கில மதகுருவினால் அச்சுத்தொழில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஹவாட் கல்லூரியின் அச்சகத்தில் பலவிதமான சிறு அச்சுப்பிரதிகள் வெளியிடப்பட்டன. 1647ல் பஞ்சாங்கம் அச்சிடப்பட்டது. பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் அமெரிக்காவில் அச்சுத்தொழில் நல்ல முன்னேற்றத்தை அடைந்தது. 19ம் நூற்றாண்டில் ஆங்கிலக் கவிஞர்களுடைய பாடல்களும் பாடசாலைப் புத்தகங்களும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. இக்கால கட்டத்தில் அச்சிடும் தொழில் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் அபரிமிதமான வளர்ச்சியை அடைந்தது. ஆயிரக்கணக்கான வருடங்கள் அரும்பாடுபட்டு இன்றைய நூல்களை உருவாக்கும் முறையை எமது முன்னோர் உருவாக்கியுள்ளனர். அந்நூல் களைப் பேணுவதிலும், உற்பத்தி செய்வதிலும் நாம் ஒவ்வொருவரும் நன்றி உணர்ச்சியுடன் செயற்படுவோமாக! ■



# புதிய தலைமுறையின் முளைகள்

பள்ளிக்கும் பணிமனைக்கும் போதல் வருதல் மற்றும்
கொள்ளை விலையேற்றம் இடையிடையே கேட்கும் வேட்டொலி குண்டுவெடிப்பு
நடுவெயிலில்
பூட்டிக் கிடக்கும் நெடுஞ்சாலை புத்தகங்கள்
வாசிக்க என்ன வழி என்று
கேட்பீர்கள்.........
யோசிப்பின்
நேரம் பணம் எல்லாம் வாரிச் செலவிட்டு
ஏதும் குறையின்றித் தோதாக எல்லாம்
முறை முறையாகச் செய்யத் துணிந்தோமே, இல்லையா?

இருபது அங்குல வண்ணத் திரையில்
எண்ணிலாத நிகழ்ச்சி இராப்பகல்
சொரியும்; மூத்தவர், இளைஞர், குழந்தைகள்
சொக்கிப்போய் ஒட்டுண்டு தொங்குவர்; நெஞ்சினை
உருகவைக்கும் மெகா தொடர் கண்ணில் நீர்
ஊற வைக்கும்; இழுபட்டு இலாஸ்ரிக்காய்
வருடம் ஒன்றையும் தாண்டும். இந்நிலையில்
'வாசியுங்கள் நூல்' என்று உபதேசித்தால்.....
பற்றி எரியும் சிலர்க்கு; பரிகாசம்
முற்றி, நகைப்பர் சிலர்; 'எந்த நூற்றாண்டில்
வாழுகிறாய்' என்று இகழ்வர்.



கணினி வலைப் பின்னல்
மூழ்கும் ஒரு தலைமுறையின் முளைகள் நாம்; எங்களுக்கு ஏன்
புத்தகங்கள்? இந்தப் புவி முழுதும் எங்கள் விரல்
நர்த்தனத்தில் புத்தனுக்கும் எட்டாத ஞானமெல்லாம்
வெள்ளரசும் இன்றி விரதத்தின் வாட்டமின்றி
அள்ளி வரலாகும் என்பீரேல்.......

கணினியிலே சேமித்து வைத்ததிலே
சிறிதேனும் மூளையிலே சேமித்து வைப்பீரேல்
வையகமும் விண்ணகமும் கைக்குள் வசமாதல்
கூடும்........ அதனாலே வாசிப்பீர், வாசிப்பீர்!

"நூலகங்கள் உள; நல்ல நூல்கள் உள;
ஞானத்தின் ஆலயங்கள் ஆகும் அவை."

"எத்தனையோ நூற்றாண்டுத் தேட்டம் இதில் ஆழப்போய்
முத்தெடுக்க வேண்டும் முனைந்து"

"சோராது கற்கத் துணிக; துயர் போகும்;
ஆராத இன்பம் அது"

"நூல் இன்பம் வேண்டின் நுழைந்திடு ஒரு நூலகத்தில்;
பேரின்பம் ஏது பிற"

உலக புத்தக தினத்தையொட்டி 23.04.08இல் கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் தலைமையில் ஐந்து கவிஞர்களின் கவியரங்கம் "வளமான வாசிப்பே மனிதனை மேம் படுத்தும்" என்ற தலைப்பில் வலி. தெற்கு பிரதேச சபை அனுசரணையில் நடை பெற்றது. இதில் இடம்பெற்ற தலைமைக் கவிதை வரிகள்.

சோ. பத்மநாதன்

# அன்றைய அச்சுப்பதிப்பு

மொழிபெயர்ப்பு
ம.க. ஸ்ரீதரன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

1846ம் ஆண்டில் உலகப்பிரசித்தி பெற்ற அமெரிக்காவிலுள்ள அச்சு இயந்திரங்களை உற்பத்திசெய்யும் நிறுவனத்தின் ஸ்தாபகரான ரொபேட்கோ (Robert Hoe) புதுவடிவமைப்புக் கொண்ட அச்சுமுறையை உருவாக்கினார். இது கோ வடிவமைப்பு (Hoe Type) உருளும் இயந்திரம் என அழைக்கப்பட்டது. தொடர்ந்து மேற்கொண்ட கடின முயற்சியினால் "த ரைம்ஸ்" நிறுவன உரிமையாளர்கள் சுழலும் இயந்திரத்தை 1868ல் நிறுவி அதற்கு "வால்டர் ரொட்டரி" (Walter Rotary) எனும் பெயரிட்டு "த ரைம்ஸ்" (The Times) பிரதிகளை வெளியிட்டார்கள். சுற்றும் உருளையினூடாகத் தாளை உட்செலுத்தி இரு பக்கமும் அச்சிடக்கூடியதான வடிவமைப்பை இது கொண்டதாகும். 1895ம் ஆண்டு வரை இது உபயோகத்திலிருந்து வந்துள்ளது. எவ்வித சந்தேகமுமின்றி இதிலிருந்துதான் தற்பொழுது நடைமுறையிலிருக்கும் புதினப் பத்திரிகைகள் அச்சடிக்கும் முறை உருவாகியது. துரித கதியிலான புதினப் பத்திரிகைகள் உற்பத்திக்கு இது மிகவும் உதவியாயிருந்தது என்றாலும், புதினப் பத்திரிகைகளைக் கைகளால் தான் மடிக்க வேண்டி நேரிட்டது. 1870ல் பத்திரிகை மடிக்கும் இயந்திரம் இரு ஆங்கில பொறியியலாளர்களான ஜி. டன்கன் (G. Duncon) மற்றும் டபிள்யூ ஏ. வில்சன் (W. A. Wilson) ஆகியோரால் கண்டுபிடிக்கப் பட்டதைத் தொடர்ந்து பத்திரிகை உலகில் ஒரு புதிய பரிணாம வளர்ச்சி ஏற்பட்டது. தற்போதைய நாட்களில் புதினப் பத்திரிகை அச்சு இயந்திரங்கள் மணித்தியாலத்திற்கு 15 சக்கரங்கள் (Reels) மூலம் 300,000 பிரதிகளை அச்சிடமுடிகின்றது. தாளின் இரு பக்கங்களிலும் அச்சுப்பதிவை மேற்கொள்ளும் யோசனை 1835ம் ஆண்டளவில் சேர். றோலண்ட்கில் (Sir Rowland Hill) என்பவரால் செயற்படுத்தப்பட்டது.

அடுத்ததாக அச்சுப்பதிப்பில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றமெனப்படுவது கையடக்கச்சிட்டைகள் (Hand Bills) அட்டைகள் (Cards) என்பவற்றின் அச்சுப்பதிவாகும். இதற்குரிய முதலாவது இயந்திரம் பொஸ்ரன் நகரிலுள்ள மாஸ் (Mass) என்னுமிடத்தில் எஸ்.பி. ரக்கில்ஸ் (Ruggles) என்பவரால் வடிவமைக்கப்பட்டது. இது "ரக்கில்ஸ் அட்டை அச்சகம் (Ruggles Card Press)" என அழைக்கப்பட்டது. கால்நூற்றாண்டுகளுக்குப் பின்னர் (1856) அமெரிக்காவைச் சேர்ந்த ஜோர்ஜ். பி. கோர்டன் (George P. Gordon) என்பவர் மெல்லிய தகட்டினை உபயோகித்து இயந்திரங்களை நிர்மாணித்தார். இது செங்குத்தான நிலையில் படுக்கை அமைப்பில் உருவாக்கப்பட்டு "த பிராங்ளின்" (The Franklin) என்ற பெயருடன் மிகத் துரிதமாக உலகம் முழுவதும் பாவனைக்காக விடப்பட்டது. கலர் அச்சுப்பதிவு அறிமுகத்துடன் தகட்டிலான இயந்திரங்களின் வளர்ச்சி மிகவும் தேவைப்பட்டது. 1869ல் கலர் அச்சுப்பதிப்பிற்காக உறுதியான தகட்டிலான அமைப்புள்ள இயந்திரங்களை



வடிவமைத்ததில் நியூயோர்க் , ரொச்செஸ்ரர் இடத்தைச் சேர்ந்த மெரிட் கலி (Merrit Gally) குறிப்பிடத்தக்கவராவார். 1850ம் ஆண்டளவில் லண்டனைச் சேர்ந்த அச்சகரான மெயின் (Main) என்பவர் தட்டையான படுக்கை உருவமைப்பு அச்சுப்பதிப்பு இயந்திரத்தை அறிமுகப்படுத்தினார். நவீன அச்சுமுறையானது தட்டை வடிவமைப்புக்கொண்ட இரு சுழற்சியுள்ள அச்சாகும். இதில் சக்கர அசைவிலுள்ள உருளை தொடர்ச்சியாக செயற்படுவதன் மூலம் ஒவ்வொரு தாள் அச்சுப்பதிப்பிற்கும் இரு சுழற்சிகளை ஏற்படுத்துகின்றது. இவ்வகையான மிகவும் பிரசித்தி பெற்ற இயந்திரம் ஒரு அனுபவமுள்ள அச்சகரான ரொபேட் மீல் (Robert Miehle) என்பவரால் 1883ல் கண்டுபிடிக்கப்பட்டு 1888ம் ஆண்டில் முதல் இயந்திரம் அமெரிக்காவில் நிறுவப்பட்டது. அச்சக இயந்திர உற்பத்தியில் மீல் (Miehle) என்பவர் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியவரெனக் கூறலாம். இவரது அச்சு இயந்திரங்கள் அநேகமான அச்சக காரியாலயங்களிலும், திறமான கலர் வேலைகளுக்கும், ஒற்றை கலர், இரட்டை கலர் அச்சடிப்புப் போன்றவற்றிற்கும் உபயோகிக்கப்படுகின்றன.

முதல் அச்சுக்கோப்பு இயந்திரம் 1822ம் ஆண்டு இங்கிலாந்து, பொஸ்ரன் நகரில் டாக்டர். வில்லியம் சேர்ச் (Dr. William Church) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் பல முயற்சிகளின் விளைவாக 1880ம் ஆண்டில் ஜோசப் தோன் (Joseph Thorne) என்பவர் விநியோகம், மற்றும் அச்சடித்து எழுத்துக் கோர்த்தல் என்பவற்றுடன் இணைந்த ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

1878ல் ஒட்மார் மேர் கென்தாலர் (Otmar Mergenthaler) என்பவர் ஒரு அச்சுப்பதிப்பு (Type Impression) இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். இதன் பின்னர் 1885 ல் இப்போது "லினோரைப்" (Linotype) என அழைக்கப்படும் இயந்திரத்தையும் இவரே உருவகித்தார். இதைத் தொடர்ந்து 1886ல் இவ் இயந்திரம் ஐக்கிய அமெரிக்காவில் பாவனைக்கு வந்தாலும் 1890 வரை பெரிய பிரித்தானியாவில் அறிமுகப்படுத்தப்படவில்லை. அச்சுப்பதிவு செய்முறையில் கடித அச்சுப்பதிவு மேற்கொள்வதற்கு இரு முக்கிய செயற்பாடுகளைக் கவனிக்க வேண்டும்.

(1) அச்சுக்களை சரிவர அமைத்தல், வாசித்தல், பக்கங்களைச் சீர் செய்தல் அச்சுக் கோர்ப்பவர் தனது வேலைகளை அச்சுக்கோப்பு அறையில் (Compossing Room) மேற்கொள்வார்.

(2) இயந்திரத்தைச் சரிப்படுத்தி அச்சுப்பதிவை மேற்கொள்ளல், மையிடுதல் தாளை அந்த நிலைக்கு ஒழுங்குபடுத்தி அச்சடித்தல். இதனை அச்சடிப்பாளர் (Press Man) மேற்கொள்வார்.

அச்சுக்கோப்பவரின் முதல் வேலையானது அதன் மாதிரி பெறப்பட்டதும் அதனை பெட்டிகளுக்குள் இடுவர். இப் பெட்டியானது மரத்தினால் தட்டை வடிவில் 32 1/2 அங்குல நீளத்திலும் 14 1/2 அங்குல அகலத்திலும் 1 1/3 அங்குல ஆழத்திலும் அமைக்கப்பட்டிருக்கும். இப்பெட்டியானது குறுக்குப்பக்கங் களாலும்

பெட்டி வடிவமைப்பிலும் அமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொன்றுள்ளும் பல வித்தியாசமான எழுத்துக்கள் இருக்கும். பொதுவாக இருவகைப்பெட்டிகள் இருக்கின்றன. மேற்பெட்டி பெரிய எழுத்துக்களுடன் 98 சிறுபெட்டிகளையும், கீழ்ப்பெட்டி சிறிய எழுத்துக்களுடன் 53 பெட்டிகளையும் கொண்டுள்ளன. உதாரணமாக, கீழ்ப் பெட்டியில் உள்ள "e" யின் எழுத்து மேற்பெட்டியில் ஐந்து மடங்கு பெரிதான "E" ஆக இருக்கும். புதினப்பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பனவற்றை அச்சிடும் இயந்திரங்களை இருவகைப் படுத்தலாம்.

(1) தானாகவே அச்சுக்களை வார்த்துக்கொள்ளும் இயந்திரம் (Linotype)
(2) தனி அச்சுக்களை வரிகள் வடிவத்தில் அமைக்கும் இயந்திரம் (Monotype)

மேற்குறிப்பிட்ட முதல்வகை அச்சுக்கோர்க்கும் இயந்திரங்களை இயக்குபவர்களை "இயக்குபவர்" (Operator) என அழைப்பர். எழுத்துகள் கீ போர்ட் பலகையின் மூலம் அழுத்துவதால் இது செயற்படுகின்றது. இரண்டாவது வகை சாதாரண அச்சு இயந்திரத்தின் (Type Writer) உருவில் வடிவமைக்கப் பட்டது. அநேக பதிப்புகளை அச்சிடுவதற்கும், சிக்கனமானதும், துரிதமாகச் செயற்படக்கூடியதான அச்சுப்பதிவுகளுக்கும் தகடுகளை உபயோகித்து அச்சிடும் முறையும் (Stereotype) மின்சக்தி மூலம் அச்சிடும் முறையும் (Electrotype) பாவனைக்கு வந்தன. புதினப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் உற்பத்தியில் தகடுகளை உபயோகித்து அச்சிடும் முறை (Stereo type) பெரும் வளர்ச்சியை ஏற்படுத்தியது. புதினப்பத்திரிகைகள் உற்பத்தியில் மிகத் துரிதமாகவும் நுணுக்கமாகவும் பாவனைக்குகந்த இயந்திரம் "ஓட்டோபிளேட்" (The Autoplate) என அழைக்கப்பட்டது. இது ஒரு அமெரிக்கரினால் கண்டுபிடிக்கப்பட்டது. மின்சக்தி மூலம் அச்சுப்பதிவை மேற்கொள்வதற்கு இரட்டை அச்சுத் தகடுகளை உபயோகித்தார்கள். 1839ல் நியூயோர்க்கைச் சேர்ந்த ஜே. ஏ. அதாம்ஸ் (J. A. Adams) என்பவர் மின்சக்தி மூலம் அச்சுப்பதிவைக் கண்டுபிடித்து அதன் அச்சுப்பதிப்பு 1841ல் மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து பலவித நுட்பங்களுடன் கூடிய அச்சு இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அமெரிக்கர்கள் இதனை "அச்சுக்கள்" எனவும் பிரித்தானியர் "இயந்திரங்கள்" எனவும் அழைத்தனர். இவை தகடுகள், உருளைகள், சக்கரங்கள் என வகுக்கப்பட்டன. அநேக தனியார் நிறுவனங்கள் தங்கள் தேவைக்கேற்றபடி குறிப்பிட்ட இயந்திரங்களை பாவனையில் ஈடுபடுத்தினார்கள். காரியாலயங்களில் புத்தகங்கள், சஞ்சிகைகள் அச்சிடுவதற்கு பூரண வடிவமைப்புள்ள இயந்திரங்கள் பாவனைக்கு விடப்பட்டன. இவை இரு விதமான தளங்களையும், இரு அச்சு உருளைகளையும் கொண்டிருந்ததுடன், ஒரு பக்கம் அச்சுப்பதிவு மேற்கொண்ட பின்னர் இயந்திரத்தின் உதவியினால் மறுபக்கம் திருப்பப்பட்டு தானாகவே அச்சுப்பதிவை மேற்கொள்ளக்கூடியவை.

*ஆதாரம்: என்சைக்கியோபீடியா பிரிட்டானிக்கா* ■



# உள்ளூராட்சியின் உன்னத சேவை

உள்ளூராட்சியின் உன்னத சேவை
உழைக்கும் கரங்களை ஊக்கிடுமே
கரங் கொண்டு அவர் செய்யும் சேவை – எம்
கனிவான வாழ்விற்கு அமைத்திடும் பூம்பாதை
தினந்தோறும் அவர் செய்யும் சேவை – எம்
திறம்பட்ட வாழ்வினை உயர்த்திடும் சேவை
கனிவோடு அவர் புகழ் பாடு – தினம்
காதாலே அவர் புகழ் கேளு

அர்ப்பண சிந்தையுடன் இருப்பவராம் – எம்
ஒப்புர வாழ்வதனைக் காப்பவராம்
வள்ளல்கள் சேவை தினம் பாரம்மா – எமக்கு
வளமார் வாழ்வதனைக் கொடுப்பாரம்மா
கல்விக்கு இவர் செய்யும் சேவையம்மா – எம்
கண்ணீர் துடைக்கும் நற் சேவையம்மா
நித்தம் இவர் செய்யும் சேவையம்மா நீ
நிறைவான மனங்கொண்டு போற்றிடம்மா

வீதிகள் ஒழுங்கைகள் அமைப்பவராம் – எம்
வாழ்விலே விளக்கேற்றி வைப்பவராம்
தோல்வியைத் தினம் துரத்தி விடுபவராம் – எம்
தோழனாய் தோள் போட்டு நிற்பவராம்
ஏழ்மையைத் தினம் தோறும் அழிப்பவராம் –ஏற்ற
ஏணியாய் துணையாகி நிற்பவராம்
சூழல் தினம் காத்து வருபவராம் – மானிட
சூழ்ச்சியிலிருந்து சூழலைக் காப்பவராம்
உண்மை நெறியில் நின்றுவிடு – உள்ளூராட்சியின்
உன்னத சேவைக்கு உதவிடு ■

*(உள்ளூராட்சி வாரம் 2008 மத்தியபிரிவு கவிதைப்போட்டி முதலிடம் பெற்ற கவிதை)*

**ஜெ. பாரதி**
*யா/ மயிலணி சைவ ம.வி*

# ஊக்குவிப்போம் உள்ளூராட்சியை

செல்வி. கல்யாணி தங்கராசா
யா/ இணுவில் மத்தியகல்லூரி.

மனிதகுலம் நன்றே தழைக்க வென்றே
மாபணிகள் பல ஆற்றும் சபையை
இனிய தமிழ் கொண்டு இயம்ப லுற்றே
இகமதிலே என் கவியின் வாழ்த்தே

வீதிகளை அழகாகச் செப்பம் செய்தே
விருத்திகளை எங் கெங்கும் ஆக்கிடுவாயே
மீதிவழி விட்டுமதில் வீடு மனைகள்
மேற்கொள்ள அனு மதியைத் தந்திடுவாயே

குழாநீர் விநியோகம் குறைகள் அற்றே
குப்பைகூளம் அகற்றுதல் செய்திடுவாயே
படிப்ப கமும் முன் பள்ளிக் கூடங்களும்
பாங்குறவே பேணிட உதவிடு வாயே

உடல்நலம் பேணநல் ஆயுர் வேதத்தை
ஊரெங்கும் நிறுவி உதவி புரிந்திடுவாயே
திடமான விளையாட்டுத் திடல்கள் பேணியே
திறமைகள் காட்ட வசதி வழங்கிடுவாயே

அறிவின் பசிதீர்க்க அருமையாய் நூலகம்
ஆக்கிச் சேவை நலம் ஓங்கிடுவாயே
நிறைவான பிரதேச மேம்பாட்டுச் செயல்களை
நித்தமும் ஆற்றும் உள்ளூராட்சி சபையே

மக்களின் பங்கேற்பு மகத்துவம் உன்னை
மேம்படுத்தி மாநிலத்து உயர்த்தும் என்றுமே;
எக்காலமும் நின்சேவை இனிதாகவே; உன்னை
ஊக்குவித்து உவந்தேத்தி உளங் கொண்டோமே ■

*(உள்ளூராட்சி வாரம் 2008 மேற்பிரிவு கவிதைப்போட்டி
முதலிடம் பெற்ற கவிதை)*



ஒரு சிந்தனை

# நுகர்வோரை நோக்காத வியாபாரங்கள்

கோப்பாய் சிவம்

வியாபாரம் என்பது நுகர்வோரை நோக்கமாகக் கொண்டதே. ஒருவர் தமது வாழ்க்கைத் தொழிலாக பொருள் தேடும் முயற்சியாகச் செய்யப்படுவதுதான் வியாபாரம் என்றாலும் தமது பொருளுக்குப் போதுமான கேள்வி இல்லாதவிடத்து அந்த வியாபாரத்தால் பயனில்லை. மேலும் அது வெறுமனே சுயலாபம் கருதிய தொழிலாக மட்டும் இல்லாமல், மக்களுக்கு வேண்டியதைத் தருவித்து அல்லது உற்பத்தி செய்து கொடுப்பது என்ற வகையில் ஒரு சேவையாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

தரமான பொருளை நியாயமான விலையில் இலகுவாகக் கிடைக்கச் செய்வதே நல்ல ஒரு வர்த்தகரின் நோக்கமாகக இருக்கவேண்டும். அதுவே மக்களுக்குத் திருப்தி தருவதாகவும் வர்த்தகருக்கு நல்ல பெயரைத் தருவதாகவும் அவருக்கு நல்ல வருவாயைத் தருவதாகவும் இருக்கும். தரமான பொருள், நியாய விலை என்ற இரண்டும் இன்று நமது சிந்தனைக்கு அப்பாற்பட்டவை. நாட்டின் நெருக்கடியான சூழ்நிலை, போக்குவரத்தில் காணப்படும் தடைகள் இவற்றால் உண்மையில் இதுபற்றி அதிகம் பேசமுடியாது. எனினும் விநியோகத்திலும் சந்தைப்படுத்தலிலும் இன்று காணப்படும் குழப்பநிலையைச் சாதகமாக வைத்து தமது வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வோர் பலராக இருக்கின்றனர்.

“நாலு இடங்களில் விலையை விசாரித்து வாங்கு” என்று பெரியவர்கள் சொல்வதைக் கேட்கலாம். கடைக்குக் கடை சிறிய அளவில் விலை வித்தியாசம் இருப்பதுண்டு. ஆனால் ஒரே பொருள் மிக அருகிலுள்ள இரு இடங்களில் மிக அதிக வேறுபாடான விலைகளில் விற்பனை செய்யப்படுகின்ற நிலைமை இன்று அவதானிக்கப்படுகின்றது. அதனால் நுகர்வோர் தமது வாடிக்கையான வர்த்தகர்கள் என்ற நிலைமையை விடுத்து, தமது நேரம் என்னும் பொன்னான பொருளின் செலவையும் மறந்து பல இடங்களுக்கு அலைகின்ற நிலைமை காணப்படுகிறது.

இந்த நிலைமையிலும் பொருட்கள் கிடைக்காத காலமாக இருப்பினும் புதிது புதிதாகக் கடைகள் திறக்கப்படுவதுதான் வியப்பாக உள்ளது. இருக்கின்ற கடைகளிலேயே பொருள்களை வாங்கமுடியாத நிலை இருக்கும் போது இன்னும் இன்னும் புதிதாகக் கடைகள் ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி திறக்கப்படுவதைக் காண்கிறோம். நமது ஆலயங்களைப்போலவே இதுவும் ஆகிவிட்டது. இருக்கின்ற ஆலயங்களை நல்லமுறையில் பரிபாலிப்பதே சிரமமாக இருக்கும்போது புதிது புதிதாக ஆலயங்களை அமைத்து அழகு பார்க்கின்ற நமது அபரிதமான பண்பாட்டு வளர்ச்சி போல இதுவும் ஆகிவிட்டது இன்று.

நாட்டில் பணவீக்கம் அதிகமாகி விட்டதுபோல பலருடைய வீட்டில் தேவைக்கு மேலாகப் பணம் சேர்ந்து அதற்குரிய சேவை உரியமுறையில் நிர்ணயிக்கப்படாததால்தான் இவை நிகழ்கின்றன. வெளிநாட்டுப் பொருளாதார வளம், அல்லது முறையற்ற வகையில் சேர்ந்த அதிக பணம் ஒரு தேவையை நாடுகிறது. “அப்போது உத்தியோகம் புருஷலட்சணம்” என்ற வகையில் ஒரு தொழில் வாய்ப்பும் தேவைப்படுகிறது. அதனால் இலகுவாகக் கிடைக்கும் முதலை இட்டு வியாபாரம் ஆரம்பமா

கின்றது. தொழிலுக்குத் தொழில், முதல் சும்மா கிடைக்காமல் ஏதோ ஒரு வகையில் முடக்கம். இதனால் எல்லா இடங்களிலும் கடைகள். ஆனால் எந்த இடத்திலும் சேவை நோக்கைக் காண முடியாது. எந்த ஒரு இடத்திலும் முழுமையாகப் பொருட்களை வாங்க முடியாது. எந்த இடத்திலும் சீரான விலை நிர்ணயம் இருக்காது. எல்லாவற்றுக்கும் மேலாக வருகின்ற நுகர்வோரை அன்பாக வரவேற்றுப் பொருட்களைப் பண்பாக வழங்கி அனுப்புகின்ற நாகரிகத்தையும் இன்று காண்பது அரிதாகி விட்டது.

"நமது கடை, நமது தொழில் நிறுவனம் இது" என்ற ஈடுபாடு, அதில் ஒரு தெய்வீகத்தைக் காணும் புனிதமான இயல்பு, நமது வாடிக்கையாளர் என்னும் நெருக்கமான உறவு, அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற உணர்வு, கடைக்கு வருவோர் நன்றியுடனும் திருப்தியுடனும் மலர்ச்சியுடனும் செல்வதைப் பார்த்து மகிழ்கின்ற ஆத்ம திருப்தி இவை எல்லாம் இன்று எங்கே போய்விட்டன? எதிலும் ஒட்டிக் கொள்ளாத ஏனோதானோ மனப்பான்மை.

வர்த்தக நிலையத்தைத் தொடங்கமுன்னரே எந்த இடத்தில் என்ன பொருளுக்கான தேவை இருக்கிறது என்பதை ஆராய்ந்து தேவையற்ற போட்டிகளைத் தவிர்த்து இல்லாத இடத்தில் இல்லாத பொருட்களை விநியோகிக்கும் மனப்பான்மை வளர மாட்டாதா?

ஒரு சிறு உதாரணத்தோடு இந்தச் சிந்தனையை முடிக்கலாம். யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியை நோக்கலாம். இணுவில் என்ற மத்தியஸ்தானத்திலிருந்து மல்லாகம் வரை செல்லும் சுமார் எட்டு கிலோமீற்றர் தூரத்துக்கிடையில் ஐந்து பெற்றோல் நிலையங்கள் உள்ளன. சுன்னாகத்தில் மட்டும் மூன்று. ஆனால், அதே இணுவிலிலிருந்து யாழ்ப்பாணம் வரை செல்லும் ஏறத்தாழ அதே தூரத்தில் எந்தவொரு பெற்றோல் நிலையமும் இல்லை.
ஒரு பகுதியில் ஒரு பொருள் குவிந்துள்ளது. இன்னொரு பகுதியில் அப்பொருள் கிடையவே கிடையாது. யார் செய்த தவறு? ■

## விந்தைப் பூக்கள்

நன்றே மலர்ந்த பூக்கள் வாடி
நாளை கீழே வீழலாம்
அன்றேல் கனிகள் ஆகிக் கூட
அரும் விதைகள் ஈயலாம்

அழகு மலரின் நிறமும் மணமும்
அயர்ச்சி கொண்ட மாந்தரை
தழுவத் தழுவ வாட்டம் நீங்கும்
தளர்ச்சி மறைந்து போய்விடும்.


தேவை வணங்கி மாலை சூட்டி
'தலைவ' என துதிகள் செய்தே
பாவை ஓதும் பக்தர் கூட்டம்
பூவை சூடுவர் பெண்களே

தேனைத் தேடும் தேனீ இனம்
திகட்டாத சுவை அறியும்
நானில த்தே அருமைப் பூக்கள்
நலம் பெருக்கி வாழுமே.




சி. அமிர்தநாதன் குருக்கள்





மயிலணி ஜனசக்தி முன்பள்ளி மாணவர்களின் ஆங்கில அபிநயப்பாடல்



வாழ்வகச் சிறார்களின் இசை நிகழ்ச்சி



வலி தெற்கு பிரதேச சபை உத்தியோகத்தரின் கவியரங்கம்



உலக புத்தக தின விழா மேடைக்கு புத்தகங்கள், சுவடிகள் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன

# கலைச்செல்வியின் சிற்பி

சு. ஸ்ரீகுமரன்




*19ம் நூற்றாண்டில் இலக்கிய வரலாற்றின் குவி மையமாகச் சுன்னாகம் விளங்கியது. வரதபண்டிதர், முத்துக்குமார கவிராயர், முருகேச பண்டிதர், குமாரசாமிப்புலவர் எனப் பலரும் ஈழத்து இலக்கியத்தைச் செழுமைப்படுத்துவதில் ஈடுபட்ட சுன்னாகப் பெருமக்களாக விளங்கினர்.*

*20ஆம் நூற்றாண்டும் அவ்வாறானதே. ஈழத்துச் சிறுகதை மூலவர்களில் இருவரான இலங்கையர்கோனும், வைத்திலிங்கமும் சுன்னாகப் பட்டினத்தின் அணித்தேயுள்ள ஏழாலையைச் சேர்ந்தவர்களாவர். அதன் பின்னர் ஈழகேசரி சுன்னாகத்திலிருந்து வெளிவந்தது. அதன் தொடர்ச்சியாக 'கலைச்செல்வி' சஞ்சிகை வெளிவந்து ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு ஒப்பற்ற பங்களிப்பை வழங்கியது.*


*அந்தக் கலைச்செல்வியை வெளியிட்டவர் சிற்பி என்ற புனைபெயருக்குள் மறைந்துள்ள சிவசரவணபவன் ஆவார். இவ்வாண்டு பவளவிழாக் கண்ட எம் மண்ணின் அறிவுசான்ற அவ்வரை வாழ்த்துவதில் 'வெள்ளிமலை' உவகையுறுகிறது.*

28.02.1933இல் காரைநகரில் சிவசுப்பிரமணிய ஐயர் தம்பதிகளின் மகனாகப் பிறந்த சிவசரவணபவன் அவர்கள் தமது பால்யப்பருவம் முதல் இன்றுவரை சுன்னாகத்திலேயே வாழ்ந்து வருகிறார். பயிற்றப்பட்ட தமிழாசிரியரான தந்தையாரின் புத்தக அலுமாரியும், மாமனாரான வைத்தீஸ்வரக்குருக்களின் எழுத்துக்களும் அவரது வாசிப்புக்குத் தீனி போட்டன. தமிழ்க்கந்தையா வித்தியாசாலையும், ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் மேடையேற வைத்து ஆக்கத்துறையில் வளர ஊக்குவித்தன. ஆசிரியர்கள் பொன்னம்பலமும் (ஆதவன்), வித்துவான் ஆறுமுகமும் இலக்கியத்தின்பால் அவரை ஆற்றுப்படுத்தினார்கள். இவையெல்லாம் அவரை ஒரு எழுத்தாளராகப் பரிணமிக்கச் செய்தன.

ஈழகேசரியின் பாலர் பகுதியிலும் கல்வி மலரிலும் எழுதத் தொடங்கிய சிற்பி அவர்கள் சுதந்திரனில் மலர்ந்த காதல் என்ற சிறுகதையை 1951 இல் எழுதியதோடு சிறுகதை எழுத்தாளராக அடையாளப்படுத்தப்பட்டார். இவரது சிறுகதைகள் நிலவும் நினைவும் (1964), சத்திய தரிசனம் (2001), நினைவுகள் மடிவதில்லை (2008) ஆகிய தொகுதிகளாக வெளிவந்துள்ளன. உனக்காக கண்ணே நாவல் 1973 இல் நூலுருப்பெற்றது. அதுதவிர பாசத்தின் குரல், சிந்தனைக் கண்ணீர் ஆகிய நாவல்களையும் எழுதியுள்ளார்.

பல புனைபெயர்களில் பல்வேறு கட்டுரைகளையும் இலக்கியப் பத்திகளையும் எழுதியுள்ளார். சிற்பி என்ற பிரதான புனைபெயருடன் கீதன்,





**15.06.2008இல் நடைபெற்ற பவள விழாவில் சிற்பி தம்பதியினர் *Dr.* தி. ஞானசேகரன் அவர்களால் கௌரவிக்கப் பட்டனர். அருகில் யாழ் இலக்கிய வட்டத் தலைவர் செங்கைஆழியான் காணப் படுகின்றார்.**

சேயோன், இலக்கியச் சித்தன் போன்ற புனைபெயர்களிலும் அவரது படைப்புக்கள் வெளிவந்துள்ளன.

ஈழத்து எழுத்துக்கள் இந்தியாவில் அதிகம் அறியப்படாதிருந்த காலத்தில் ஈழத்துச் சிறுகதைகளைத் தொகுத்து இந்தியாவில் வெளியிட்டார். ஈழத்துச் சிறுகதைகள் பற்றிய பரவலான அறிமுகத்தைச் செய்த முதல் நூல் என்ற பெருமை இந்நூலுக்குண்டு.

சிற்பி அவர்களின் விதந்து கூறத்தக்க பெரிய இலக்கியப் பணியாக கலைச்செல்வியை வெளியிட்டமையைக் கூறலாம்.

1958 ஆடிக் கலவரத்தின் பின்னர் பிறப்பெடுத்த கலைச்செல்வி 1966 ஆவணி மாதம் வரை 71 இதழ்கள் மலர்ந்து மணம் பரப்பி நின்று போனது. ஈழத்து இலக்கியத்துக்குக் காத்திரமான பங்களிப்பை வழங்கிய கலைச்செல்வி ஒரு காலகட்டத்தைத் தனக்கென ஆக்கிய தகைமை பெற்ற சிறப்புக்குரியது.

பல்வேறு சிறப்பு மலர்களை வெளியிட்டும், பல சிறப்புப் பகுதிகளை வெளியிட்டும் அடையாளப்படுத்தத்தக்க நல்ல பதிவுகளை கலைச்செல்வி ஈழத்திலக்கியத்துக்கு அளித்துள்ளது. 60 களில் எழுதத் தொடங்கி இன்று முன்னணி எழுத்தாளர்களாக விளங்கும் பலரும் கலைச்செல்வியால் உருவாக்கப்பட்டவர்களே. அத்துடன் இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் வாழும் மூத்த எழுத்தாளர்கள் பலரும் கலைச்செல்வியில் எழுதியுள்ளனர். தமது சொந்தப் பணத்தில் – சம்பளத்தில் – கலைச்செல்வியை வெளியிட்டு நீண்ட காலம் கையைக் கடித்துக்கொண்ட சிற்பி அவர்கள் பொருளாதார நிலைமை சீர்கெட்டபோது கலைச்செல்வி இயற்கை எய்தியது. சிறந்த பொருளாதாரப் பின்னணி வாய்த்திருந்தால் கலைச் செல்வி நீண்டு நெடுங்காலம் வாழ்ந்திருக்கும்.

'விளக்கு' கல்வியியல் சஞ்சிகையின் ஆசிரியராகவும் அவர் பணியாற்றினார். கல்வி சார் விடயங்களை, ஆசிரிய வாண்மையை மேம்படுத்தும் விடயங்களை விளக்கு சஞ்சிகை அதிகம் கொண்டிருந்தது. நீதிமன்ற எழுதுவினைஞராகப் பணியில் சேர்ந்த அவர் பின்னர் ஆசிரியத் தொழிலில் நுழைந்து அதிபராக உயர்ந்து இளைப்பாறியவராவார். பாடசாலைகளில் பணியாற்றும் காலத்தில் மாணவர் மன்றங்களை நிறுவி மாணவர்களது ஆக்கத் திறனை வளர்த்ததோடு பாடசாலைச் சஞ்சிகைகளையும் வெளியிட்டார்.

பவளவிழாக் கண்ட சிற்பி அவர்களது மதிப்பார்ந்த பணிகளைக் கௌரவித்து 2002 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது வழங்கப்பட்டது. 2006 இல் கொழும்பு கம்பன் கழக விருதும். 2007 இல் வலி. தெற்கு பிரதேச செயலகத்தின் ஞான ஏந்தல் விருதும், 2008இல் காரைநகர் பிரதேச சபையால் கலைச்சுடர் விருதும் வழங்கப்பட்டன. பல்துறைப் பணியாற்றிய வலிகாமம் தெற்குப் பிரதேசத்தின் பெருமகனான சிற்பி அவர்கள் நீண்ட காலம் தமிழுக்குச் செழுமை சேர்த்து வாழ வாழ்த்துகிறோம். ■

# வலி தெற்கு பிரதேசசபை 2008
# உள்ளூராட்சி வார நிகழ்வின் பதிவுகள்



07.07.2008, 08.07.2008
சிரமதானம்

09.07.2008 ஏழாலை மத்திய சனசமூக நிலையத்திலும் 14.07.2008 தாவடி மத்திய சனசமூக நிலையத்திலும் ஆயுர்வேத மருத்துவ முகாம்களும் மூலிகைக் கண்காட்சிகளும் இடம்பெற்றன.





10.07.2008இல் முன்பள்ளி மாணவர்களுக்கான கணினி அறிமுகம் உடுவில், சுன்னாகம் பொது நூலகங்களில் நடைபெற்றன.





பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டுவிழா 10.07.2008இல் மருதனார்மடம் திறந்த வெளியரங்கில் நடைபெற்றது.




18.07.2008 உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வு பிரதம விருந்தினரான உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. ம. வசந்தகுமார் வரவேற்கப்பட்டார்.

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை அறநெறி மாணவர்கள் வழங்கிய சமுதாயகுசேலர் நாடகம்



உடுவில் சக்தி தியாகராசா



# நீலப்பூக்கள்

கீழ்வானில் சூரியன் மெல்ல மெல்ல பூமாதேவியை முத்தமிட மெல்லென எழுகிறான். அவனது பொற்கதிர்கள் எங்கும் நிறைகின்றன. புற்றரையில் அந்த நீலப்பூக்கள் விரிகின்றன. பனிநீரில் நீராடி பகலவன் வரவை வரவேற்கின்றன. இந்த இயற்கை நிகழ்வுகளை கடந்து போன பருவ காலங்களில் கண்டும், அதனால் ராகவனது உள்ளத்தே கிளர்ந்தெழுந்த காலக்கரை தட்டும் எண்ண அலைகளை அவனன்றி வேறு யார் அறிவார். பெரும் அலை ஒன்று மனமுகட்டை முட்டி மோதி கடந்த காலச்சக்கரத்துள் அவனை இழுத்துச் செல்கின்றது.

“எட தம்பி இப்படி நாளும் வேலை வெட்டி இல்லாமல் ஊர் சுற்றிக்கொண்டு திரிஞ்சால் எப்படித்தான் உன்ரை தங்கச்சிமாரை கரைசேர்ப்பது? இதைப்பற்றி யோசிக்காமல் உன்ரை பாட்டில் இருந்தா எங்கடை துன்பம் துயரம் வறுமைகள் ஒழிஞ்சு போகுமா? நான் சொல்லிக் கொண்டே இருக்கிறன். என்னடா பேசாமல் இருக்கிறாய்” என அப்பாவின் பேச்சு என் அடிமனதில் தொடராகப் பதிகின்றது. என் மௌனம் தொடர்கின்றது. “சொல்லன்டா ஒரு முடிவை” அம்மாவின் குரல் இடை இடையில் ஒலிக்கின்றது.



தம்பி உன்னை வெளி நாட்டிற்கு அனுப்ப ஏசண்டுக்காரன் பத்து லட்சம் தரட்டுமாம். நான் சரி என்று சொல்லிப் போட்டன். உன்ர சம்மதம்தான் வேணும். சொல்லன்டா தம்பி.....

நான் சுற்றுமுற்றும் பார்க்கிறேன். மூலையில் தங்கைமார் ரமா, பிரபா ‘அண்ணா என்ன சொல்லப் போகிறான்’ என எதிர்பார்த்து கொண்டிருக்க எனது சம்மதத்தை தெரிவிக்கிறேன். எல்லோர் முகங்களிலும் நம்பிக்கை ஒளி பரவுகிறது. அப்பா பரம்பரையாக இருந்த, இவ்வளவு காலமும் எங்களை வாழவைத்த அந்த பருத்திக்காணி ஐந்து பரப்பை விற்றும், அம்மாவின்ர காதான் கழுத்தான் நகைகளை விற்றும் பணத்தைத் திரட்டி குமரேசனிடம் கொடுத்து விட்டார். குமரேசன் என்னையும் வேறு இரண்டு எமது ஊர் பெடியன்களையும் ஜேர்மனியில் இறக்கிவிட்டு மறைந்து விட்டார்.

அறியாத இடம், புரியாத மக்கள், தெரியாத மொழி என்னைத் திண்டாட வைத்துவிட்டது. பழங்கால சைகை மொழிதான் எனக்கு உதவியது. என்னோடு வந்தவர்கள் எங்கே போனார்களோ தெரியவில்லை. திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை என்பார்கள். தற்செயலாக எனது நண்பன் பரமேசை அங்கு சந்தித்தேன். அவனது உதவி ஜேர்மனியில் கால் பதிக்க பெரும் பங்கைச் செய்தது. பதிவில்லா மனிதப் பூச்சிகளாக பல இடத்தில் கள்ளமாக வேலை செய்து, பணத்தை சேர்த்து ஊருக்கு அனுப்பினேன். அப்பா, அம்மாவைக் காணுகிறவர்கள் ‘உன்ரை மகன் வெளிநாட்டில் நல்ல வேலையில் இருக்கிறான். எங்கட மகளுக்குப் பொருத்தம் பார்ப்போமா’ என்ற நச்சரிப்புக்கள். பல வருடத்தொடர்ச்சிக் கிடையில். என்ரை தங்கச்சிமார் இரண்டுபேர் கல்யாணமும் வெகு தடல்புடலாக நடந்து முடிந்து விட்டன.

காலம் கரைகின்றது. நான் தினமும் பார்க்கும் கண்ணாடி இளமைக் கோலம் காட்டுகின்றது. ஆனால் தலையில் இளநரை புன்னகைக்கிறது. முதுமை மாது கட்டி அணைக்க முயல்கின்றாள். ‘தம்பி ஊரவங்கள் கரைச்சல் பொறுக்க முடியவில்லை. உன்னை வீட்டு மருமகனாக்கத் துடிக்கிறாங்கள். நான் சொல்லிப் போட்டன் இன்னும் மூண்டு வருசங் கழியட்டும் எண்டு. இப்ப உனக்கு என்னத்துக்கு கலியாணம். வீடு புதுப்பிளானாக கட்டப்போறம். கிடுகு வாங்கக் கட்டாது. சுற்றி மதில் கட்ட நினைக்கிறம். காசை கெதியா அனுப்பு குறைஞ்சது முதல்ல பத்து லட்சத்தை அனுப்பு’ என்று தொலைபேசியூடாக வந்த அப்பாவின் வார்த்தைகள் என்னை சுற்றி சுற்றி தன் வசப்படுத்துகின்றது. எனக்கு அப்பா, அம்மா வைத்த பெயர் அருமை ராகவன். ஓம் ஓம் என்ரை அப்பா, அம்மாவுக்கு பெருமை தரும் அருமையான பிள்ளைதான். ஆனால் நான் உழைத்து ஓடாகிப்போகும் மனித ஜென்மம். பெற்றவர்கள் பெருமைப் படுகின்றார்கள். தன் மகன் வெளி நாட்டில் என்று. நானோ இங்கு எனது அஸ்தமனம் நோக்கி விரைகிறேன். ஜன்னலைத் திறக்கிறேன்.

இதமான குளிர்காற்று என்னைத் தழுவுகின்றது. மொட்டவிழ்ந்து விரியும் நீலப்பூ என்னைப் பார்த்து கண் சிமிட்டுகின்றது. ■

# கவிதையின் களமுனைகள்

கு. றஜீபன்

இலக்கியம் பாடவேண்டிய தேவையும் அவசியமும் உணரப்படும் போதுதான் உண்மையான களமுனைகள் உருவாகின்றன. தமிழ் இலக்கியப் பரப்பில் கவிதையின் களங்கள்தான் அதன் உயிர்ப்பினை நிர்ணயம் செய்கின்றன. தமிழ்க் கவிதைப்பரப்பில் ஒரு கவிதைக்குள் உருவம் முக்கியமா? உள்ளடக்கம் முக்கியமா? என்ற வாதப்பிரதிவாதங்கள் கடந்துவிட்ட நிலையில் இன்றைய இலக்கிய அறிவியல் வளர்ச்சியில் ஒரு கவிதைக்கு உருவத்தையும் உள்ளடக்கத்தையும் வழங்குவது அக்கவிதை பாடப்படும் களநிலமைதான் என்ற புதிய கருத்துநிலை தோன்றியுள்ளது. தமிழ்க்கவிதைத் துறையில் களமுனை என்பது மிகவும் முக்கியத்துவப்படுத்தவேண்டிய ஒன்றாக இன்று மாறிவருகிறது.

இவ்வகையில் இலக்கிய வரையறைக்கு உட்படுத்தி இருக்கின்ற தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒவ்வொரு காலப்பகுப்பிலும் இருந்த களமாற்றங்களுக்கு ஏற்பவே அந்தந்தக் காலங்களில் இலக்கியத் தோற்றங்கள் நிகழ்ந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. சங்ககாலத்தில் நிலவிய களநிலமை காதலையும் வீரத்தையும் பாடும்போது ஒரு காட்சிக்கும், அவதானிப்புக்கும் ஒவ்வொரு பாடல் பாடப்பட்டிருக்கிறது. இதே போன்று தான் சங்கமருவியகால, பல்லவர்கால, சோழர்கால களநிலமைகளுக்கு ஏற்பவே அக்கால இலக்கிய முயற்சிகளும் இலக்கிய அமைப்புகளும் மாறுபாடுகள் பெற்றுள்ளன. இது கள நிலமைகளுக்கு ஏற்பக் கவிபாடும் மரபை வரலாற்றுத் தொடர்ச்சியூடாக எமக்குக் காட்டுகிறது.

இந்த வகையில் இந்த நூற்றாண்டின் இலக்கியப் போக்குகளில் கவிதையின் இயங்குதளத்திற்கு வேண்டிய களமுனைகளின் அவசியத்தை ஆராய்ச்சிக்கு உட்படுத்த வேண்டி இருக்கிறது. ஒரு கவிதை எழுகின்ற உண்மையான யதார்த்த உணர்வோட்டத்தினுடனான களநிலமைதான் அக்கவிதைப் படைப்பினை உச்சமானதாக்குகிறது. ஒரு களத்தின் உருவாக்கமும் அதன் நிகழ்களமும்தான் உண்மையான கவிதைப் படைப்பியலுக்கு ஊற்றுகளாக அமைகிறன. எந்த ஒரு கவிதை, பாடப்படுகின்ற களநிலமையோடு ஒன்றிச் செல்கின்றதோ அக்கவிதைதான் ஒரு ஆக்கபூர்வமான படைப்பாகிறது. கற்பனை நயத்தில் உருவாக்கப்படுகின்ற கள அவதானிப்பும் கவிதைப்படைப்பும் சமூகச் சித்தரிப்பைக் காட்டுகின்ற படைப்பாக இருக்காது. சங்ககாலத்தில் பாடப்பட்ட காதற் பாடல்கள் கூட கற்பனைக் களத்திலிருந்து உருவாக்கப்பட்டவையல்ல. அது ஒரு சமுதாய அசைவியக்கத்தில் இருந்து முகிழ்ந்தவை. அவ்வாறான களநிலமையை அவதானித்து இன்றைய கவிதைகள் பாடப்படுகின்றனவா? என்பதும் ஆராய்ச்சிக்குரிய விடயம்.

அந்தவகையில் இன்றைய கவிதையினுடைய புறச்சூழலும் களஅவதானிப்பும் ஈழத்துக் கவிதைத்துறையில் நிறையவே இருக்கின்றன. ஈழத்துப் புறச்சூழல் அமைவியலில் கவிதை பாடவேண்டிய களங்கள் நிறையவே விரிந்திருக்கிறன. இங்கு பல்வேறு வகையான களமுனைகளுக்கூடாக படைப்புக்கள் வெளிவருவது ஈழத்துக் கவிதையியலின் அசைவியக்கத்தை காத்திரமானதாக உருவாக்கியிருக்கிறது. ஈழத்துக் கவிதைகள் களநிலமைகளின் நடைமுறை வெளிப்பாடாக கவிஞர்களின் அனுபவப் பட்டறிவாக வாழ்வியலின்



உணர்வுத் தளத்தோடு ஒன்றிச் செல்கிறது. ஒரு கவிதைப் படைப்பியலுக்கான உணர்வு உந்தல் ஈழத்துக் கவிஞர்களுக்கு இயல்பாகவே எழுகிறது.

எனினும் கவிதைக்கான பல்வேறுபட்ட களநிலமைக்ள் மாறுபட்ட களச்சிக்கல்களையும் கொண்டிருக்கிறன. இந்தச் சிக்கல்கள் தான் ஈழத்துக் கவிதையியலில் படிமம், குறியீடு, எடுத்துக்காட்டல், நிகழ்வுகூறல் போன்ற உத்திமுறைகளில் ஒரு ஆழத்தை ஏற்படுத்தியிருக்கிறன.

அனுபவப் பகிர்தலின் அழகான மொழி வடிவமே கவிதை. மொழியைக் கையாளும் விதத்தில் தான் கவிதை தன்னை அலங்கரித்துக் கொள்கிறது. உயிர்ப்பின் தேடல் எந்தக் கவிதையில் நிறைந்திருக்கிறதோ அந்தக் கவிதை காலத்தை வாழவைக்கிறது. கவிதை புரிதலுக்கான அழைப்பை முதல்வரியிலும் அது பகிர்தலுக்கான உணர்வை இறுதிவரியிலும் எந்தக்கவிதை கொண்டிருக்கிறதோ அது இலக்கியத்தை உயரவைக்கிறது. இந்த வகைப்பாட்டுக்குள் அமைந்த வடிவ மாற்றங்கள்தான் ஈழத்துக் கவிதைச் சிறப்பின் தனித்துவமாகின்றன.

இவ்வாறாக செயற்கைச் சிருஷ்டிப்பு இல்லாத உயிரோட்டமான களநிலமைதான் உண்மையான படைப்புக்களை உருவாக்கிறது. அவதானிப்பு முறையின் ஆழநோக்கு கவிதைப் படைப்பியலை ஒருமுகப்படுத்துகிறது. இதனைவிடுத்து குழுசார்ந்த நோக்குமுறை கருத்து நிலைச் சிதைவுக்கும் களமாறுபட்டுத் தன்மைக்கும் வழிவகுக்கும் அபாயம் தற்போதைய ஈழத்துக் கவிதையியலில் தொற்றியிருக்கிறது. களம் சார்ந்த அனுபவப் பகிர்வில் ஊற்றெடுக்கின்ற கவிதைகள் இனம் சார்ந்த தேடலையும் புரிதலையும் இலக்கிய விமர்சனத்திற்கு விட்டுவிடுகிறது. ஆகவே ஒரு கவிதையுடன் களநிலமைகள் தான் இலக்கிய வடிவத்தையும் அதன் நோக்கு முறையையும் நிர்ணயிக்கிறது. ஒரு கவிதையில் களநிலமைகளின் பிரதிபலிப்புத்தான் அதனைத் தரமான படைப்பாக இனம்காட்டுகிறது. ■



ஞானவிலாசம் நிகழ்ச்சித் தொடரில் 'ஞானம்' சஞ்சிகை அறிமுகவிழா இடம்பெற்றபோது சஞ்சிகை ஆசிரியர் டாக்டர். தி. ஞானசேகரன் அவர்கள் கலாபூஷணம் சு. துரைசிங்கம் அவர்களால் கௌரவிக்கப்படுகின்றார். அருகில் பிரதேசசபைச் செயலர் திருமதி. ச. சொக்கலிங்கம் காணப்படுகிறார்.

# உஸ்மான் செம்பேன்

ஒவ்வொரு கலையும் தனக்கான தனித்துவங்களினைக் கொண்டு வீறுநடை போட்டுச் செல்கின்றது. இவ்வகையிலே சினிமாவும் தனக்கான சாத்தியங்களுடன் சமுதாய பெறுமானத்திலே உயர் நிலையில் உள்ளதுடன் மக்களுடன் உறவாடுகின்றது.

இவ்வகையிலே வாழ்க்கையை நெருக்கத்தில் காட்டுகின்ற கலைவடிவம் சினிமா எனில் மிகையில்லை. இவ்வகையிலே பார்வையாளர்களின் உணர்வுகளை மிக உயர்ந்த அளவு பாதிக்கக்கூடிய சாத்தியப்பாட்டினை சினிமா தன்னகத்தினுள் கொண்டுள்ளது.

சினிமாவினையும் அதன் வெளிப்பாட்டினையும் சமூகம் எனும் தளத்தில் நின்று தரிசனம் கொண்டால் பார்வையாளர்களின் தேடல்களுக்கு விடை கிடைக்கும். இவ்வகையிலே படைப்பினை கண்டு கொள்ளுதல் என்பது அப்படைப்பினை உருவாக்கிய படைப்பாளியின் மனப் பதிவுகள் உணர்வுகள் என்பவற்றினை கண்டு கொள்ளல் மூலமே சாத்தியமாகும்.

இவ்வகையிலே உலகப் புகழ் பெற்ற ஆபிரிக்காவின் முதற் கலைஞனான உஸ்மான் செம்பேன் பற்றி அறிவோம். ஒவ்வொரு கலைஞனுக்கும் தனித்துவம் உண்டு. அத்தனித்துவத்தினை இவரும் கொண்டுள்ளதுடன் தனது அனுபவங்களின் வெளிப்பாடாகத் தனது படைப்புகளை வெளிக் கொணர்ந்துள்ளார்.

1923ம் ஆண்டு ஜனவரி 1ம் நாள் தெற்கு செனகலில் பிறந்த இவர் 12 வயதிலே பள்ளிக்கு சென்றார். ஆனால் 14 வயதிலேயே பள்ளியை விட்டு வெளியேறி, பல்வேறு தொழில்களினை மேற்கொண்டார். தச்சனாக, மீனவனாக பல வேலைகளில் ஈடுபட்ட இவர் 2ம் உலகப்போரில் பிரெஞ்சு இராணுவத்திற்காக ஐரோப்பாவிலும் ஆபிரிக்காவிலும் நான்கு ஆண்டுகள் போரிட்டார். எனினும் தனது பெரும்பாலான நேரத்தினைத் தொழில் முறையில்லாத நாடகக் குழுக்களோடும் உள்ளூர் வுலப் (Wolof) மொழிக் கதை சொல்லிகளோடும் செலவிட்ட இவர் 1962ல் மாஸ்கோகோர்க்கி இன்ஸ்டிட்யூட்டில் சினிமா கல்வியைப் பயின்றார். இவர் 1963இல் செனிகலில் ஸொங்காய் சாம்ராஜ்யம் எனும் முதல் குறும்படம் ஒன்றினைத் தயாரித்தார்.

இவர் தொடர்ச்சியாக பலதிரைபடங்களினைத் தயாரித்தார். அதிலே 1947/1948ல் மோதம் இடம்பெற்ற ரெயில்வே வேலை நிறுத்தத்தின்போது தான் பெற்ற அனுபவ வெளிப்பாடாக Gods Bits of Wood எனும் படத்தினை உருவாக்கி யிருந்தார்.

இவரது படைப்புகள் காலனியாதிக்கம் / நவ காலனியாதிக்கம் இழந்துவிட்ட தொல்மரபுகள் என்பன பற்றி பேசிச் செல்கின்றன. இவரது ஆளுமையைப் பறைசாற்றும் வகையிலே 1995ல் ஆபிரிக்க திரைப்பட விழாவிலே Ceddo எனும் திரைப்படம் திரையிடப்பட்டது.

இவரது படைப்புகளில் குறிப்பிடக்கூடிய திரைப்படங்களாக பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம்.

- மணி ஓடர் *(The money order / modobi)*
- இடிக்கடவுள் *(The God of Thunder Emitai)*
- சாபம் *(Xla)*
- செட்டோ *(Ceddo)*
- தியாராயோ முகாம் *(Comp de thiaroye)*
- குலேவர் *(Gulewaar)*

**எஸ். ரி. அருள்**

இவ்வகையிலே இவரது படைப்புகள் பற்றிய அறிவும் உலகப்புகழ்பெற்ற இதர படைப்பாளிகளின் படைப்புகளின் தரிசனங்களும் எமக்கு ஆதாரமாய் அமையும் எனில் மிகையில்லை. ■



சிறுவர் பகுதி

# கமலனும் * விமலனும் *

**சின்னண்ணா**

“என்ன விமலன், முகம் கறுத்துப்போயிருக்குது? வழக்கம் போலை வீட்டிலை அப்பா அம்மாவோடை ஏதோ வில்லங்கம் போலை இருக்குது?”

“எந்த நாளும் வில்லங்கம் தானே கமலன்? இப்ப உன்னட்ட ஒருக்காப் போட்டு வாறன் எண்ட உடனயே தொடங்கீட்டினம். அதுகளோட ஒரே துன்பமாய்ப் போச்சுது.”

“அதையேன் துன்பமெண்டு சொல்லிறாய்? இப்ப அது உனக்குப் பழகிப் போட்டுதெண்டால் இனி அது துன்பமாயிராது தானே. நீ முதலிலை உதுக்கெல்லாம் அலட்டிக் கொள்ளாமலிருக்கப் பழகவேணும்.”

“எந்த நேரமும் படிப்பு, படிப்பு எண்டு ஒரே அறுவை. கொஞ்ச நேரம் விளையாடினால் என்ன?”

“கொஞ்சம் பொறு. இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே? நீ இண்டைக்குக் காலமை எத்தினை மணிக்கு எழும்பினனி?”

“ஏழரை மணி.”

“காலமை கொஞ்ச நேரம் ஏதாவது படிச்சனியோ?”

“உனக்கென்ன கமலன் விசரே? விடிய எழும்பின உடனை புத்தகத்தைத் தூக்க ஒரே அலுப்பாயிருக்குது.”

“சரி. காலமை உன்ரை விளையாட்டுச் சாமான்களோடை பொழுது போட்டுது. அதுக்குப்பிறகு ரியூஷன். பிறகு என்ன செய்தனி?”

“ரி. வி யிலை நல்ல படமொண்டு. அதைப் பாத்துக்கொண்டிருக்கேக்கையே இரண்டாம் உலகமகா யுத்தம் தொடங்கீட்டுது.”

“அப்ப முதலாம் உலக மகாயுத்தம் படுக்கையாலை எழும்பேக்கை தொடங்கீட்டுது போலை?”

“உனக்குத் தெரிஞ்சதுதானே!”

“பிறகு?”

“பின்னை உந்தத் தசாவதாரம் சீ. டீ எடுத்தரப்போறன் எண்டன். சீ. டீ பிளேயரையே எடுத்து வைச்சிட்டார் அப்பா.”

“நான் ஒண்டு சொல்லட்டே. அவை சொல்லிறதிலையும் செய்யிறதிலையும் பிழையில்லைத் தானே. நீ.......”

“கொஞ்சம் பொறு. எனக்கும் ஆசைகள் இருக்கும் எண்டு ஏன் நினைக்கினமில்லை. எந்த நேரமும் படி படி எண்டு ஒரே கரைச்சல். வீட்டை விட்டு ஒரு இடமும் வெளிக்கிடக்கூடாது. சிநேகிதரோட சேரக்கூடாது..........”

“இஞ்சை பார் விமலன். இதைத்தான் தலைமுறை இடைவெளி எண்டு சொல்லிறது. அவை முந்தின தலைமுறை ஆக்கள். அவை வளர்ந்த முறை வேறை. அதேபோலைதான் நாங்களும் நடக்கவேணுமெண்டுதான் அவை நினைப்பினம். அது சரி எண்டு நான் சொல்லேல்லை. ஆனால் நாங்கள் கொஞ்சம் அட்ஜெஸ்ட் பண்ணிக்கொண்டு போனால் எல்லாம் சரிவரும்.”

“உன்ர கொப்பர் கொம்மாவோடை உது சரிவரும். ஆனால் எங்கடை அப்பா அம்மாவுக்குச் சரிவராது உனக்கெல்லாம் எவ்வளவு சுதந்திரம்.”

"நீ நினைக்கிறமாதிரியில்லை விமலன். எங்கடை வீட்டையும் உந்தப் பிரச்சினை இருக்குது. ஆனால் என்ரை அப்பா அம்மா நல்லாய்ப் படிச்சிருக்கினம். அதோடை நவீன பழக்கவழக்கங்களையும் கொஞ்சம் அனுசரிச்சுப் போற தன்மை வீட்டிலை இருக்கிறதாலை என்ரை விருப்பங்களுக்கு தடை குறைவு. ஆனால் அதைவிட முக்கியமான ஒரு விசயத்தை நீ தெரிஞ்சு கொள்ள வேணும்."

"என்ன அது?"

"அனுசரிச்சுப் போறதெண்டது. இரண்டு பக்கமும் இருக்கவேணும். அதை ஆர் முதலிலை தொடங்கிறதெண்டுதான் பிரச்சினை. நான் அப்பா அம்மாவின்ரை விருப்பத்துக்கு ஓரளவு நடக்கிறதாலை அவை என்ரை விருப்பத்துக்கு கொஞ்சம் இடம் தருகினம். நீ பிடிவாதமாய் அவை சொல்லிற எல்லாத்துக்கும் மறுத்தான் போடுறதாலை அவைக்கு உன்னிலை வெறுப்புக்கூட வந்திடும். பழைய தலைமுறை ஆக்கள் எங்களைத் தங்கடை கட்டுப்பாட்டுக்குள்ளை வைச்சிருக்கத்தான் விரும்புவினம். அதுமட்டுமல்லாமல் தங்களுக்கு நிறைய அனுபவம் இருக்கிறதாலை எல்லாம் தங்களுக்குத்தான் தெரியும் எண்டு நினைப்பினம். நாங்கள் சின்னப்பிள்ளையள் எண்டதாலை எங்களுக்கு ஒண்டும் தெரியாது எண்டும் எங்களை மற்றாக்கள் ஏமாத்திப் போடுவினம் எண்டும் அவை நினைச்சுக்கொண்டிருப்பினம். எந்த நேரமும் கங்காரு தன்ரை வயித்துப் பையிலை குட்டியை வச்சிருக்கிறமாதிரி எங்களைத் தங்கடை கையிலை வச்சிருக்கவேணுமெண்டு நினைப்பினம்."

"உதுதானே துன்பமாயிருக்குது."

"அவை அப்பிடி ஏன் நினைக்கினமெண்டு விளங்கிக்கொண்டமெண்டால் அது துன்பமில்லை. பெரிய இன்பம். எங்களை அளவுக்கு மிஞ்சி நேசிக்கிறதினாலைதான் அவை உப்பிடி நடக்கினம். தங்கடை அன்பை நாங்கள் வேறை நண்பர்களோடை பங்கு போட ...தைக்கூட அவையாலை சிலநேரம் தாங்கமுடியுதில்லை. அதுதான் கண்டபடி சிநேகிதரோடை சேராதை எண்டு சொல்லுகினம். நாங்கள் அவையைப் புரிஞ்சு கொள்ளவேணும் அவை... தெரியாத கன விசயங்களைச் செய்ய முடியும் எண்டும் அவை விளங்கத்தக்கதாக நாங்க... துகொள்ளவேணும். அதோடை நவீன கால விசயங்கள் அவைக்கு ஒண்டுமே தெரியாது ...ண்டு நாங்கள் அவையைக் குறைச்சு எடைபோடவும் கூடாது. அவைக்குக் குடுக்கவேண்டிய மரியாதையைக் குறைக்கவும் கூடாது."


"நீ என்ன பெரிய லெக்சரெல்லாம் அடிக்கிறாய்?"

"நீ நான் சொல்லிறபடி நடந்துபார். விளங்கும். அவையின்ர ஆசையளை முதலிலை நாங்கள் பூர்த்திசெய்ய வேணும். பிறகு எங்கடை ஆசையை விண்ணப்பிக்கவேணும் அதிலை பிழை இல்லை எண்டதை விளக்கமாய்ச் சொல்லவேணும். ரி.வி பார்க்கிறது, விளையாடுறது எல்லாம் தேவையான அளவுக்கு மட்டும் எண்ட நிலையிலை வீட்டிலை கொஞ்ச நேரம் ஆறுதலாயிருந்து படிக்கிறதுக்கும் அப்பா அம்மாவின்ரை வேலையளிலையும் நாங்கள் கொஞ்சம் பங்கெடுக்கவேணும். அப்பதான் இடைவெளி குறையும். அவை சொல்லிறதையும் நாங்கள் கேப்பம். நாங்கள் சொல்லிறதையும் அவை கேட்க வைப்பம். இப்ப நேரமாச்சுது. உடனை வீட்டை போ. பழைய காலத்துப்பழக்கம் எண்டு பகிடி பண்ணாமல் கை கால் முகம் கழுவிச் சாமி கும்பிட்டுட்டு ஒரு மணித்தியாலமாவது படி. அப்பா அம்மாவுக்கு எங்கடை பாடங்கள் தெரியாது எண்டு நினைக்காமல் அவையிட்டைக் கொஞ்சம் கேட்டுப்படி. அதுக்குப்பிறகு "வாற சனிக்கிழமை தசாவதாரம் சீ.டி எடுத்துத் தாறீங்களோ" எண்டு கேட்டுப் பார். எல்லாம் புதுமாதிரி மாறியிருக்கும்.

"ஓ. கே நான் போட்டு வாறன்."

**(பெற்றோர்கள் மன்னிக்க வேண்டும். சிறுவர்களை ஒன்றும் தெரியாதவர்கள் என்று நினைக்காமல் அவர்களை அவர்களாகவும் வளர விடவேண்டும் என்ற உளவியலை அவர்களது கோணத்தில் பார்த்து சிறிது வித்தியாசமாக எழுதிய ஆக்கத்தின் தன்மையை உணர்ந்துகொண்டு அவர்கள் இதை வாசித்தபின் அவர்களிடம் ஏற்படும் உளவியல் பரிமாணத்தை அவதானியுங்கள். நீங்களும் ஒத்துழையுங்கள்)** ■





இ. வித்தகன்
இந்துக் கல்லூரி



டிசானா நாகரத்தினம்

# கைவண்ணத்துக்கு கவிவண்ணம்

*சித்திரங்களுக்கு ஏற்ற சிறு கவிதைகள் சில வரிகளில் வாசகர்களிடமிருந்து எதிர் பார்க்கப்படுகின்றன.*



**நூ**லகமொன்றின் தேவை கடந்த பல வருடங்களாக உணரப்பட்ட போதிலும் இடவசதியின்மை ஒரு பாரிய குறைபாடாக இப்பாடசாலையில் இருந்து வந்தது. எனினும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் ஏற்கனவே கிடைக்கப்பெற்ற மிகக் குறைந்தளவு நூல்களை வகுப்பறை வாசிப்புக்குப் பயன்படுத்தி வந்தோம். எனினும் நூல்களைப் பாதுகாப்பதில் பல இடையூறுகள் ஏற்பட்டன. பாதுகாப்பின்மை, கறையான் அரித்தல் போன்றன இடையூறுகளாகக் காணப்பட்டன. இந்நிலையில் 2002ஆம் கல்வி ஆண்டில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் இருந்து உள்ளக கற்பித்தல் பயிற்சிக்காக வருகைதந்த திரு. சிவலிங்கம் முரளிதரன் அவர்கள் தனது செயலாய்வுத்திட்டத்திற்கு நூலக அபிவிருத்தி தொடர்பான செயற்பாட்டை முன்னெடுத்தார். அதற்கு அதிபர் அவர்களும் உரிய மிகையான ஒத்தாசையை வழங்கியமை காரணமாக தேசிய கல்வியற் கல்லூரியின் நன்மதிப்பினை கிராமத்தில் உட்சென்று நூல்கள் பல சேகரிக்கப்பட்டன. அதிபர் அறையாகப் பாவிக்கப்பட்ட மண்டபத்தின் பிரதான அறையை நூலகமாக மாற்றுவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

# ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய நூலகம்

அவ்வகையில் நூலகம் ஒன்று தற்காலிகமான முறையில் ஆரம்பிக்கும் நடவடிக்கை மேற்கொ... மதிப்பார்ந்த யாழ். தேசியற் கல்வியற் கல்லூரி பீடாதிபதி திரு. தி. கமலநாதன் அவர்களால் உத்தியோகபூர்வமாக 13.07.2002 அன்று திறந்து வைக்கப்பட்டது. அது ஒழுங்குமுறையில் இயங்குவதற்கு திருமதி. தாரணி சுரேஷ் ஆசிரியர் அவர்களும் தொண்டு அடிப்படையில் செயற்பட செல்வி. சிபா அவர்களும் செயற்பட்டனர். எனினும் மாணவர் எண்ணிக்கை, நூல்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குறித்த நூலகத்திற்கென ஒதுக்கப்பட்ட இடம் பொருத்தமானதாகத் தொடர்ந்து அமையவில்லை. 05.09.2003 அன்று குறித்த சில தமிழ்மொழி மூலமான கதை நூல்கள் கறையான் அரித்திருப்பதைக் கண்டு ஆசிரியர்களும் அதிபரும் மாணவ தலைவர்களும் மனம் நெகிழ்ந்தனர். இதன் பின்னர் ஒரு நிரந்தர, வசதி கொண்ட நூலகக்கட்டடம் ஒன்றின் தேவை சகல தரப்பினராலும் உணரப்பட்டது. இந்நிலையில் 2004ஆம் ஆண்டில் ஏழாலை வடக்கு பழைய மாணவனும் தற்போது பிரான்சில் வசிப்பவருமான குணசிங்கம் சிவரூபன் அவர்கள் வருகை தந்த பொழுது அவர் தானாக முன்வந்து ஏறக்குறைய ஐந்து இலட்சம் ரூபா செலவுடன் கூடியதாக நூலகக்கட்டடமொன்றை அமைப்பதற்கான ஒப்புதலை அளித்தார். எனினும் நாட்டில் காணப்பட்ட விலைவாசி உயர்வு காரணமாக குறிப்பிட்ட பருமன் கொண்ட கட்டடத்தை மேற்படி செலவீனத்தில் செய்து முடிப்பதில் சிரமம் இருப்பதை மதிப்பார்ந்த திரு. திருமதி. பாலதயானந்தன் ஊடாக அறிவித்த நிலையில் மதிப்பிற்குரிய திரு, திருமதி. குணசிங்கம் குடும்பத்தினர் மேலும் மூன்று லட்சம் ரூபாவுடன் மொத்தம் எட்டு லட்சம் ரூபா நிதியினை வழங்குவதற்கு மனம் உவந்த நிலையில் ஒப்புக்கொண்டதன்



பேரில் 2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் யாழ் மாவட்ட கல்வித் திணைக்கள பொறியியலாளர் அவர்களின் பூரண அனுமதி கிடைக்கப்பெற்றது. உரிய வரைபடத்தை பெற்றுக்கொள்வதில் வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப அலுவலர் திரு. ந. ஜெயசீலன் அவர்கள் மேலான ஒத்துழைப்பை வழங்கினார். இந்நிலையில் 24.02.2005 அன்று சுபவேளையில் அன்பளிப்பாளர் திரு. கு. சிவரூபன் அவர்களின் பெற்றோர் மற்றும் திரு. திருமதி. பாலதயானந்தன் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சூழ்ந்திருக்க நூலகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் பின்னர் நூலகம் தொடர்பான உணர்வு மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் கிராமத்தவருக்கும் உயர்ந்த நிலையில் காணப்பட்டது. அதன் பின்னர் துரித கதியில் கட்டட வேலைகள் முன்னெடுப்புச் செய்யப்பட்டன. கட்டடத்தின் பிரதான வேலைகள் குறித்த காலங்களில் நிறைவேற்றப் படுவதில் மனத்திருப்தி ஏற்பட்டபோதிலும் கூரை வேலைகளுக்கான தரமான மரங்களைப் பெற்றுக்கொள்வதில் நாட்டின் போக்குவரத்து தடை ஏற்பட்டமை பின்னடைவை ஏற்படுத்தியது. இது அதிபர் அவர்களுக்கும் திரு. பாலதயானந்தன் அவர்களுக்கும் செயற்பாட்டுப் பின்னடைவு மனப்பயத்தை ஏற்படுத்தியபோதிலும் இறையாசியினாலும் நல்ல உள்ளங்களின் மன உணர்வினாலும் கூரை வேலைகள் உரிய ஒழுங்கில் மேற்கொள்ளப்பட்டு கட்டடம் பூர்த்தி ஆக்கப்பட்டது.

**ந. சுப்பிரமணியம்**
அதிபர்
யா/ ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்.
ஏழாலை

இடைக்காலத்தில் 19.09.2005இல் செல்வி. வனிதா நவரத்தினம் அவர்கள் ஆசிரிய நூலகராக நியமிக்கப்பட்டமை நூலகத்தின் செயற்பாடுகளை மாணவர் நலன் கருதி முன்னெடுப்பதற்கு முழுமையாக உதவியது. கட்டட வேலைகள் பூர்த்தி அடைந்த நிலையில் திறப்பு விழாவை அன்பளிப்பாளர் மதிப்பார்ந்த திரு. குணசிங்கம் சிவரூபன் தம்பதியினரைக் கொண்டு மேற்கொள்வது என்பது அதிபர் ஆசிரியர்களினதும் அவாவாகும். எனினும் நாட்டில் ஏற்பட்ட பொருத்தமற்ற சூழ்நிலைகள் அன்பளிப்பாளர்களின் வருகை சாதகமாக அமையாத நிலையில் அவர்களினதும் திரு, திருமதி. பாலதயானந்தன் அவர்களினதும் பேரவாவிற்கு இணங்க வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் மதிப்பார்ந்த திரு. ப. விக்னேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு மறைந்த திரு. குணசிங்கம் சுரேந்திரன் ஞாபகார்த்தமாக திரு. குணசிங்கம் சிவரூபனால் அன்பளிப்பு செய்யப்பட்ட நூலகத்தினை வெகு விமர்சையாகத் திறந்து வைத்தார். மேற்படி நிகழ்வு பாடசாலை வரலாற்றில் மிக உன்னதமான செயற்பாடும் அதன் வளர்ச்சியில் ஒரு மைல் கல்லும் ஆகும்.

ஆரம்பத்தில் 100 இலும் குறைந்தளவு நூல்களே காணப்பட்டன. ஆனாலும் 2002ஆம் ஆண்டில் நூல்களின் தொகை 350ஆக உயர்வடைந்தது. பாடசாலை மாணவர்களின் பிறந்த நாள் மற்றும் விசேட வைபவங்களின் பொழுதும் வழங்கப்படுகின்ற நினைவுதினப் புத்தகங்கள் நூலகத்தில் நூல்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தது. அவ்வகையில் இன்று மொத்தமாக 1350 எண்ணிக்கையான புத்தகங்கள் பாவனையில் உள்ளன. கடந்த ஒக்டோபர் 31, நவம்பர் 1, 2 ஆகிய நாட்களில் சுன்னாகம் பொதுசன நூலகத்துடன் எமது பாடசாலை இணைந்து நடமாடும் நூலக சேவையை நடாத்தியது. (புத்தகக் கண்காட்சியையும் புத்தக விற்பனையும்)

புதிய கட்டடம் அமைக்கப்பெற்றதன் பின்னர் பின்வரும் நன்மைகளை பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் அதிபரும் பெற்று வருகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

01. நூலக நூல்களை மழை ஒழுக்கு, கறையான் அரித்தல் போன்றவற்றில் இருந்து முழுமையாக பாதுகாக்க முடிந்தமை.
02. மாணவர்கள் உரிய முறையில் பயன்படுத்தும் வகையில் பரந்த இடப்பரப்பும் மின் வசதியும் காற்றோட்டமும் கொண்டதாகப் பயன்படுத்த முடிகின்றமை.
03. தேவை ஏற்படும் இடத்து கிராம வாசகர்களும் பயன்படுத்தக்கூடிய தகைமை கொண்டிருத்தல்.
04. நூலகத்தின் மீது மாணவர்கள் பற்றுக்கொண்டு ஆர்வத்துடன் செயற்பட முடிகின்றமை.
05. கற்றல் செயற்பாடுகள் முடிந்த பின்னரும் மாணவர்கள் ஓய்வுநேரப் பயன்பாட்டை பெற முடிகின்றமை.
06. போட்டிகளின் ஊடாக மாணவர் வாசிப்புத்திறனை அதிகரிக்க முடிகின்றமை.
07. ஒட்டுமொத்தமாக நூலகத்தின் மூலம் அனைவரும் உயர்வான பயனை பெறக்கூடியதாக இருத்தல்.
08. நூலகம் மென்மேலும் முழுமையான போற்றத்தக்க பயன்பாட்டை பெறுவதற்கு பின்வரும் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்படல் நன்று.

- *வாசகர் மேசைகள் இரண்டினைப் பெற்றுக்கொடுத்தல்.*
- *நூலக புத்தக ராக்கைகள் நான்கினைப் பெற்றுக்கொடுத்தல்.*
- *நூலகக் கதிரைகள் இருபத்தைந்தும் மேசைகள் ஆறும் பெற்றுக் கொடுத்தல்.*
- *நூலகத்திற்கான மின்விசிறி ஒன்றைப் பெற்றுக்கொடுத்தல்.*
- *நூலகத்தின் யன்னல்களுக்கு கண்ணாடி மூலமான பாதுகாப்பை இடல்.*

மேற்படி செயற்பாடுகள் நிறைவேற்றப்படுவதன் ஊடாக ஒரு முழுமையான வெற்றியினை பெ... என நம்புகிறேன். கற்றல் வள நிலையத்தினை அமைத்துத்தந்த திரு. ...மதி. குணசிங்கம் சிவரூபன் குடும்பத்தினர் அவர் தம் பெற்றோர் குடும்ப ...ினர்கள் மற்றும் இடைநின்று மனதாரச் செயற்பட்டு உடனுக்குடன் நிதியைப் பெற்று ஒத்தாசை வழங்கிய திரு, திருமதி. பாலதயானந்தன் குடும்பத்தினரின் சிறந்த முன்மாதிரிச் செயற்பாடுகளே எதிர்கால மாணவர்களுக்கு வழி காட்டி நிற்கின்றன.

**சிரிப்பு**
சில்லறை இல்லையென்றார் நடத்துநர்
சில்லறை சிதறும் சப்தம்....?
திரும்பினேன்!! பெண்கள் கூட்டம்.

**சகுனம்**
பல்லி சொன்னது; படியைத் தாண்டினேன்
காகம் கரைந்தது; கதவைத் திறந்தேன்
விசில் கேட்டது; ஒழுங்கையில் இறங்கினேன்.

**கொள்ளை மலிவு**
கொக்குவில், கோண்டாவில், மானிப்பாய்
அச்சுவேலி, ஆவரங்கால், தீவுப்பக்கம்
எங்குமே...

**நேரம்**
முன்னே சென்று முந்தினேன்;
பின்னே சென்று விரட்டினேன்;
அகப்படுதே இல்லை; இன்னும்

**புத்தகம்**
எத்தனை உலகு எத்தனை உணர்வு
எத்தனை மனிதர் எத்தனை செயல்கள்
அத்தனை யும் உன்னுள்

**காதல்**
பாசமும் நட்பும் பழக்கமும்
பக்தியும் பயமும் உறையும்
நெஞ்சின் உணர்வு மின்னல்

**சாதகப் பிழை**
பொருத்திப் பொருத்திச் சலித்து விட்டார்
பொன்னுத் துரைச் சாத்திரியார்
பொருந்து தில்லை மகளின் சாதகம்

**பரணி**



# பாடசாலையில் அண்மையில் அறிமுகமான 5E பிரயோகமும் அதன் எண்ணக்கருக்களும்

- சொ. ஹரிசங்கர் -

தற்போது பாடசாலைகளில் விரிவுரைக்கற்றலானது மாற்றப்பட்டுள்ளது. மாணவர்கள் தாமாகவோ அல்லது வழிகாட்டலுடனோ தேடிக் கற்கவேண்டி உள்ளது. இது மாணவர் மத்தியில் அதிக ஞாபகத்தையும் நிறைந்த அனுபவத்தையும் வழங்குகின்றது. இதன் பிரகாரம் ஆசிரியரது வகிபாகம் பல்வேறு வழிகளில் மாற்றப்பட்டுள்ளது. ஆசிரியர் ஒரு நடிகன் போல் பல்வேறு வடிவங்களினை ஏற்று நடிக்க வேண்டிய தேவை உள்ளது. வழிகாட்டியாக, நண்பனாக, வழிப்படுத்துபவராக, தகவல் சேகரிப்பாளராக, உதவி செய்பவராக என பல்வேறு நடிபங்கு எடுக்கவேண்டிய தேவை உள்ளது.

எனவே தற்போது இலங்கையில் கல்விச்சீர்திருத்தங்கள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் அண்மைக்காலத்தில் புதிய கலைத்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களும் அதற்கேற்ப மாறவேண்டிய தேவை உள்ளது. 2007ம் ஆண்டு அறிமுகமான கலைத்திட்டம் முதன்முதலில் தரம் 6, தரம் 10 என்பவற்றை உள்ளடக்கியது. 2008ல் தரம் 7, தரம் 11ஐ மையப்படுத்தியும் 2009ம் ஆண்டில் தரம் 8, 9ஐ மையப்படுத்தியும் கலைத்திட்டம் மாற்றப்பட வுள்ளது.


பாடசாலையில் அண்மையில் அறிமுகமான பாடத்திட்டம் எழுதும் முறையான 5 E ஆனது முதன்மையாகி தேர்ச்சி மையக்கல்வி (Compency based Curriculum) ஆசிரியர் வகிபாகம் (Role of a teacher) பாடத்தெரிவு அணுகுமுறை (approach of choosing subject) என்பவற்றை கொண்டுள்ளது.

தேர்ச்சி என்பது அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி ஆகியன இணைந்த ஒரு இயலுமையாகும். பழைய பாடத்திட்டத்தில் தேர்ச்சியை இனம்கண்டு ஆசிரியரே எழுதவேண்டிய தேவை இருந்தது. தற்போது தேர்ச்சிமையக் கல்வியின் மூலம் குறிக்கப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்ட தேர்ச்சியை அடைவதற்கு ஏற்றவகையில் பாடத்திட்டம் எழுதப்பட வேண்டும். இத் தேர்ச்சி பொதுவானதாக அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளிலும் பொதுவான ஒரு தேர்ச்சியை அடையக்கூடியவாறு மாணவர்கள் தயார் செய்யப்படுகின்றார்கள்.

*தேர்ச்சிகளான:*
*01.* தொடர்பாடல் தேர்ச்சி
“எழுத்தறிவு (Literacy)”, “எண்ணறிவு (Numaracy)” “சித்திர அறிவு (Art)”, “தகவல் தொழில்நுட்பம் (Information technology)”
*02.* வேலை உலகிற்கு தயார்செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்.
*03.* சூழல் தொடர்பான தேர்ச்சிகள்: சமூகச்சூழல், உயிரியல் சூழல், பௌதீகச்சூழல்.

04. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்.
05. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்.
06. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்.
07. கற்றலுக்கு கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்.

**தேர்ச்சி தொடர்பான எண்ணக்கருப்படம் [KASP]**




அனுபவச் செயற்பாட்டின் மூலமே கற்றல் நிகழ்கின்றது. இத்தேர்ச்சியை கட்டியெழுப்பும் மாதிரியே KASP எனப்படுகின்றது.

**பழைய பாடத்திட்டத்தில் உள்ள குறைபாடுகள்**

- சிந்திக்கும் ஆற்றல் குறைவு.
- சமூகத்திறன்கள் பலவீனம் அடைந்து காணப்படல்.
- தனிப்பட்டதிறன் குன்றியிருத்தல்.
- தனித்துவப் பண்பு குறைவாக இருத்தல்.
- பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் ஆற்றல் குறைவாகக் காணப்படுதல்.
- உலகின் சவால்களுக்கும் போட்டிகளுக்கும் முகம்கொடுக்க முடியாமை.

**புதிய கலைத்திட்டம் கொண்டுள்ள புதிய எண்ணக்கருக்கள்**

- தேர்ச்சி மையக்கல்வி.
- மாணவர் மையச் செயற்பாடு.
- ஆசிரியர் வகிபாகம்.
- செயற்பாடு சாரந்த பாடத்திட்டம்.

## புதிய பாடத்திட்டம் 5E Model

மாணவரை மையப்படுத்தியதாகவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகிறது. மாணவர்கள் தாமாகவே புதிய விடயங்களை விளங்கி கொள்வதற்கு கூடுதலான சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.



1) E1 - Engage - ஈடுபடுத்தல்
2) E2 - Explore - கண்டறிதல்
3) E3 - Explain - விளக்குதல்
4) E4 - Elaborate - விரிவுபடுத்தல்
5) E5 - Evalute - மதிப்பிடுதல்

இங்கு மாணவர்கள் பாட அலகுடன் தொடர்பான விடயங்களை செய்து பார்த்தல், கலந்துரையாடல், தர்க்கித்தல், நியாயப்படுத்தல், பிரச்சினை தீர்த்தல் போன்ற செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

## செயற்பாட்டுத்திட்டமிடல் பாடக்குறிப்பு மாதிரி
## Activity based lesson plan - model

1) தேர்ச்சி (Competency)
2) தேர்ச்சி மட்டம் (Competency level)
3) நேரம் (Time)
4) தரவிருத்தி உள்ளீடு (Quality inputs)
5) கற்றல் கற்பித்தல் செயற்பாடு (Teaching Learning process)

**a)** ஈடுபடல் *(Engagement)*
செய்துகாட்டல், வாசிப்பு, சுயாதீன எழுத்து வேலைகள், வரைவிலக்கணம் செய்தல்.

**b)** கண்டறிதல் *(Exploration)*
குழுவேலைகள், அணிவேலைகள், ஈடுபடுதல், பரிசோதனை செய்தல், ஆராய்தல், ஒரு விடயத்தை வாசித்து தகவல்திரட்டல், பிரச்சினை விடுவித்தல், கண்டறிதல், மாதிரி ஒன்றை உருவாக்குதல், ஒரு விடயம் தொடர்பாகச் செயலாற்றுதல்.

**c)** ஈடுபடல் / விளக்குதல் *(Explanation)*
பரிசோதனை முறையில் விசாரணை, தாம் கண்டுபிடித்தவற்றை முன் வைத்தல், பிரச்சினை விடுவித்தல், தீர்மானம் எடுத்தல், சிந்தனை விருத்தி, ஒன்றிணைந்த தீர்மானம்.

**d)** விரிவாக்கம் *(Elaboration)*
மாணவர்கள் தாம் கற்றுக்கொண்ட செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்தும் செயற்பாடு இதுவாகும். ஆசிரியரின் உதவியுடன் கற்று வந்தவற்றை நடைமுறை உலகுடன் பிரயோகித்துப் பார்ப்பது எனலாம். பரிசோதனை முறை விசாரணை, செயற்றிட்ட முறையிலான ஈடுபாடு, ஒன்றிணைந்த தீர்மானம்.

**e)** மதிப்பிடல் / *Measurement & Evaluation*
கணிப்பீடு மதிப்பீடு உபகரணங்களைத் தயாரித்தல், அவதானிப்பு, செவ்வை பார்த்த பட்டியல், மாணவர்களை நேர்காணல், நாட்குறிப்புப் பதிவு, செயலடைவுக்கோவை.

6) பின்னூட்டல்

உசாத்துணை 'படி' சஞ்சிகைகள்

# உழைப்பு

**வ. பாலமுருகன்**

"ம் மா.........ம்ம்மா" தொட்டி லருகே நின்ற பசுமாட்டின் சத்தம் உரத்துக்கேட்கவே வீட்டின் விளக்குகள் ஒளிர்ந்தன. என்ன நடந்தது என்று பார்ப்பதற்காக மாட்டின் உரிமையாளர் விளக்கோடு தொழு வத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தார். நேரம் பன்னிரண்டு மணியைத் தாண்டியிருந்தது, இரவின் கருமை எங்கும் வியாபித்திருந்தது. காசியும் திருவும் புதருக்குள் பதுங்கிக் கொள்கின்றார்கள். "மச்சான் வெளிச்சம் படாதபடி படுத்துக்கொள்" திரு எச்சரிக்க "பிடிபட்டோமோ செத்தோம்" பதட்டத்தோடு கூறினார் காசி.

காசி ஓர் விவசாயக் குடும்பத்திற் பிறந்தவர். விவசாயியாகவே வாழ்ந்து வந்தார். ஒரே அண்ணனான பழனியும் ஷெல் பட்டு இறந்து போனதால் தாய், தந்தையர் காலமானபின் வீடும், தோட்டமும் காசிக்கே சொந்தமாகின. தந்தையிடம் கற்றுக் கொண்ட கமத்தொழில் காசியை சிறப்பாக வாழ வைத்தது.

மீனாட்சியைக் காதலித்தே மண முடித்தார் காசி. நிறம் சற்றுக் குறைவாக இருந்தாலும் அழகிலும் பண்பிலும் சிறந்து விளங்கினாள். சமையல் வேலைகளோடு காசிக்குத் தோட்ட வேலைகளிலும் உதவியாக இருந்தாள். தோட்டத்திலே கடுமையான வேலைகள் நடைபெறும் நாட்களில் உணவினை ஆக்கி வந்து தோட்டத்திலேயே காசிக்குப் பரிமாறிவந்தாள். வேலை செய்த களைப்புடனும் பசியுடனும் இருக்கும்போது மனைவி பரிமாறிய உணவினை உண்ணும்போது காசி தன்னையே மறந்திருப்பார்.

அளவான வருமானம், அன்பான மனைவி, நிறைவான வாழ்க்கை என சொந்த மண்ணில் வாழ்ந்து வந்த காசியின் வாழ்விலும் விதியின் கதிர்வீச்சுக்கள் விழத்தான் செய்தன. சொந்த மண்ணில் அமைதியாய் வாழ்வதென்பது ஈழத்தமிழன் வாழ்வில் அரிதான விடயம். யுத்தம் என்கின்ற கொடிய அரக்கனின் விளையாட்டுத்திடல்களில் ஒன்றாக காசியின் பிறப்பிடமும் மாறியிருந்தது. அதன் விளைவாக முகாம் வாழ்க்கை விதிக்கப்பட்டிருந்தது.

கமத்தொழிலைத் தவிர வேறெந்தத் தொழிலையும் தெரிந்திராத காசியின் வாழ்க்கைப்பாதை முட்பாதையாக நீண்டு சென்றது. இடப்பெயர்வு என்பது இல்வாழ்வானை இல்லாதவன் ஆக்கியிருந்தது. அகதி முகாமிற்கும் வதை முகாமிற்கும் இடையில் வித்தியாசம் என்று பெரிதாக ஒன்றுமில்லை என்பதை அனுபவித்தவர்களுக்கே தெரியும். காசியும் உணர்ந்து கொண்டார். தெரியாத ஊர், அறிமுகமில்லாத மனிதர்கள். எத்தொழிலைச் செய்வது? எவ்வாறு பிழைத்துக் கொள்வது?... இடிந்துபோய் உட்கார்ந்திருந்தார் காசி. ஆறுதல் கூற



முன்வந்து தோற்றுப் போயிருந்தாள் மீனாட்சி. எத்தனை நாள்தான் சும்மா இருப்பது? வீடு வீடாகச் சென்று ஏதாவது வேலை இருக்குதா என்று கேட்டார் காசி. கிடைத்த வேலைகளைச் செய்து கூலி பெற்றுக்கொண்டார். வேலி அடைத்தல், காணி துப்பரவு செய்தல் போன்ற வேலைகள் மூலம் நாட்கூலி பெற்றார். சொந்த ஊரில அனுபவித்த வாழ்க்கை கையை நினைக்க நெஞ்சை அடைப்பது போல இருந்தது. ஆனாலும் உடலை வருத்தி வேலை செய்து பெற்ற அற்ப சொற்ப பணத்தைக் கொண்டு மனைவியோடு சேர்ந்து கஞ்சியைக் குடித்து வாழ்வதிலும் ஒரு வகைத் திருப்தி இருந்தது.



ஒரு முறை கூலி வேலை செய்வதற்காய் செல்லுகின்றபோது வழியிலே பழைய நண்பனான திருவைக் கண்டார் காசி. குழப்படிக்காரனான திரு சிறு வயதிலேயே வீட்டைவிட்டு ஓடிவிட்டான். இன்று பெரிய மீசை விட்டு சங்கிலி, மோதிரம் அணிந்து பெரிய ஆளாக நின்ற திருவை காசியினால் உடனே அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை. பின்னர் அடையாளங் கண்டு கொண்டதும் திருவும் நண்பனது நிலை கண்டு மனம் வருந்தினான். காசி தனது நிலை பற்றிக் கூறும் போது சற்று அழுதே விட்டார். காசியை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான் திரு. கல்வீடு, வாகனம், மனைவி பிள்ளைகள் என்று வசதியோடு வாழ்ந்து வரும் நண்பனின் நிலை கண்டு வாயடைத்து நின்றார் காசி. "திருவோ படிக்கவுமில்லை, குழப்படிகாரன். தோட்ட வேலை செய்த அனுபவம் கூட இல்லை, பிறகு எப்படி வசதியாக வாழுகிறான்" மனதிற்குள் வியந்தவாறே "நீ என்ன தொழில் செய்கிறாய் திரு?" கேட்கிறார் காசி. "பிஸ்னஸ்" சுருக்கமாக விடை கூறுகிறான் திரு. "உனது பிஸ்னஸில என்னையும் சேர்ப்பியே? சிறுபிள்ளையின் ஆவலோடு சட்டென்று கேட்கிறார் காசி. இதைச் சற்றும் எதிர்பாராத திரு சற்றுநேரம் யோசித்துவிட்டு "ம்ம்..." என்று பதிலளிக்கிறான். இருவரும் தேநீர் அருந்திமுடித்ததும் "போட்டு வாறன்" என்று கூறிப் புறப்படுகின்றார் காசி. திருவும்

காசியோடு சேர்ந்து வாசல்வரை வந்து காசியின் முதுகிலே கையைப் போட்டு தனது தொழிலைப் பற்றிக்கூறி காசியையும் இணைந்து கொள்ளும்படி கூறுகின்றான். காசி திகைத்துப்போனார் "களவு என்பது ஒரு தொழிலா? எங்களது பரம்பரையிலேயே இல்லாத ஒன்று. பத்து ரூபாய் சம்பாதித்தாலும் நேர்மையாய் உழைத்து சம்பாதிக்கவேணும்" தந்தையின் சொற்கள் மந்திரமாய்க் காதுகளில் ஒலித்தது. "ஐயோ திரு குறைநினைக்காத, இது எனக்கு சரிப்பட்டு வராது, நான் வாறன்" திருவின் கையைத் தட்டிவிட்டு முகாம் நோக்கி விரைகின்றார்.

வீட்டிற்குச் சென்றபோது மனைவி சொன்ன செய்தியால் பரவசமடைந்தார். ஆம்! காசி தந்தையாகப் போகிறார். இன்னும் சில மாதங்களில் அவர்களின் கைகளில் ஓர் குழந்தை! வறுமையை நினைக்கப் பயமாய் இருந்தது காசிக்கு. மனைவியைப் பார்த்தார். மீனாட்சி சற்று மெலிந்திருந்தாள். சேலை கந்தலாகி இருந்தது. தலையிலே சில நரைமயிர்கள். "போதிய உணவில்லை, உடுப்புக்கள் இல்லை. இனிக் குழந்தையையும் சேர்த்து எவ்வாறு காப்பாற்றப் போகிறேன்?...." யோசித்துக் கொண்டே இருந்தார் காசி. அன்றைய இரவு காசியைப் பொறுத்தவரை சிவராத்திரியாகவே அமைந்தது. இரவு முழுவதும் அவர் தூங்கவே இல்லை.

காலையில் ஓர் முடிவிற்கு வந்தார். ஆபத்திற்குப் பாவமில்லை. திருவுடன் இணைந்துகொள்வது தான் சரி. திருவிடம் தனது முடிவைக் கூறினார். திருவும் சந்தோஷத்தோடு வரவேற்றான். "மச்சான் கொன்றால் பாவம் தின்றால் போச்சு என்பார்கள். நாங்க என்ன கொலையா செய்யப் போறோம். களவுதானே. கண்ணனும் வெண்ணெய் திருடினவன் தானே. கள்வனையும்கடவுள் காப்பாற்றுவார். நீ ஒண்டுக்கும் யோசியாத" அறிவுரை கூறினான் திரு.

மனைவி மீனாட்சியிடம் தனக்கு பேக்கரி ஒன்றில் வேலை கிடைத்திருப்பதாகச் சொல்லிவிட்டு இரவுகளில் திருவுடன் சேர்ந்து தேங்காய்த் திருட்டு, மாய்காய்த் திருட்டு என சிறு சிறு திருட்டுக்களில் ஈடுபட்டு வரும் பணத்தில் குடும்பத்தைக் காப்பாற்றினார் காசி. "துன்பங்கள் ஒரு மனிதனை எப்படியெல்லாம் மாற்றி விடுகின்றன. என்னையும் திருடனாக மாற்றிவிட்டதே" மனம்புளுங்கினார் காசி. என்னதான் வசதியிருந்தாலும் வாழ்வில் ஓர் திருப்தியில்லாததை உணர்ந்தார்.

சில மாதங்கள் நகர்ந்தன. "மச்சான் ஓரிடத்தில் பெரிய பசுமாடு நிக்குது. அதைக் களவாக வெட்டி இறைச்சியைக் கடையில குடுத்தால் கொளுத்த லாபம் கிடைக்கும். கடையில விலையும் பேசிவிட்டன். இரவு வெளிக்கிட வேணும் ஆயத்தமாயிரு" திரு கூற பயந்துபோனார் காசி. "டே திரு பசுவைக் கொல்வது பாவமடா, வேண்டாமடா" எனக் கெஞ்சினார் "டேய் விசரா களவெடுக்க வந்திட்டு ஏன் பயந்து சாகிறா? பில்லா படம் பாத்தனியே, அதில அஜித் சொல்லுகிறார் நாம் வாழ வேண்டுமெண்டால் யாரை வேணுமெண்டாலும் கொல்லலாம் எத்தனை முறை வேணுமெண்டாலும் கொல்லலாம் நாங்க என்ன மனிசரையே கொல்லப் போறம் மாட்டத்தானே! உன்ரை மனிசியின்ர பிரசவத்திற்கும் காசுவேணுந் தானே. பயப்பிடாமவா" காசிக்கும் காசு தேவையாய் இருந்தது.

இருள் துவங்கியதும் திருவிடம் செல்ல ஆயத்தமானார் காசி. "இன்று நீங்க போகவேணுமா? எனக்கு வயித்தில வலியாய் இருக்கு, ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டியும் வரலாம்" மீனாட்சி கூற "அப்படி ஒன்றும் நடக்காது, நாள் கிடக்குத் தானே. இன்று பேக்கரியில நிறைய வேலகிடக்கு, நேரத்தோட வந்திடுவன். பயப்பிடாத நான் போட்டு வாறன்" புறப்பட்டார் காசி.

"டே காசி என்ன நித்திரையோ? ஆக்கள் போயிட்டினம் வா" முதுகில் தட்டினான் திரு. இருள் எங்கும் பரந்திருந்தது. திருவுடன் சேர்ந்து காசி அந்தப் பாவத்தைச் செய்தார். இறைச்சியை வெட்டிப் பையில் போடுகையில் அந்தப் பசுவின் வயிற்றிலும் ஓர் ஜீவன் இருந்ததெனும் உண்மையை அறிந்தபோது காசியால் அதை ஜீரணிக்கவே முடியவில்லை. இறந்த கன்றுக் குட்டியை தூர எறிந்துவிட்டு மூடையைச் சுமந்துகொண்டு நடக்கையில் மூடையைவிட இதயம் கனத்தது காசிக்கு.

இறைச்சி விற்ற காசோடு முகாமிற்கு வந்தார் காசி. அங்கே "என்ன காசி நேற்று எங்கே போனாய்? ராத்திரி உன்ர மனிசிக்கு பிரசவவலி எடுத்து உன்ர பேரச்சொல்லிக் கத்தினாள், பாவம் அன்புலன்சில ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டம். உடனே போய் அவளைப்பார்" முகாமில் இருந்தவர்கள் கூற வைத்தியசாலை நோக்கி விரைந்தார் காசி.

"நீங்கதான் மீனாட்சியின் புருசனா? எங்கே போயிருந்தீங்க பிள்ள திரும்பியிருக்கு ஒப்பரேசன் செய்துதான் எடுக்க வேணும், இதில ஒரு கையெழுத்துப் போடுங்கோ" தாதியொருத்தி படிவம் ஒன்றை நீட்ட கை நடுங்கியவாறே கையெழுத்திட்டார் காசி. "கடவுளே சிவபெருமானே பெரும் பாவங்களை செய்துவிட்டேன். கண்டுத்தாச்சி மாட்டையும் கொன்று விட்டேன். இனிமேல் எத்தத்தப்பும் செய்யாமல் நேர்மையாக உழைத்து எனது குடும்பத்தைக் காப்பாற்றுவன். என்னை மன்னித்துவிடு. குழந்தைக்கும் தாயிற்கும் எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக்கொள்" வேண்டுதல் தொடர்ந்தவண்ணமிருந்தது. சில மணிநேரம் கழித்து தாதி ஒருவர் வந்து "உங்களுக்கு ஆண்குழந்தை பிறந்திருக்கு தாயும் மகனும் சுகமாயிருக்கிறார்கள், போய்ப் பார்க்கலாம்" கூறிமுடிப்பதற்குள் உள்ளே சென்றுவிட்டார் காசி. அழகான ஆண்குழந்தை, குழந்தையின் தலையைத் தடவினார். கண்கள் பனித்திருந்தன. "நாங்கள் செய்த புண்ணியம் ஆபத்தில்லாமல் அதுவும் ஆண்குழந்தை பிறந்திருக்கு" கூறினாள் மீனாட்சி. குற்ற உணர்ச்சி முள்ளாய்க்குற்றியது காசிக்கு. முகாமிற்குத் திரும்பும்போது அருகிலுள்ள சிவன் கோயில் உண்டியலில் மாடுவித்த காசினைப் போட்டார். கோயில் வாசலிலுள்ள ஓவியத்தில் ரிஷபத்திலே அமர்ந்திருந்த சிவனும் பார்வதியும் கருணையின் வடிவமாகக் காட்சியளித்தார்கள். உழைத்து வாழ்வதென உறுதியாக முடிவெடுத்தவண்ணம் நடக்கலானார். மனதில் பாரம் குறைந்து சந்தோஷம் குடிகொண்டது. ■

# அகிலம் காட்டும் அகல்விளக்கு

காத்திரமான ஒரு கிராமத்தில் அறிவாளிகள் பலர் இருப்பார்கள். ஆயின் பண்பாளர்கள் இல்லையாயின் அதனால் பயன் குறைந்தே காணப்படும். அறிவும் அன்பும் மட்டுமன்றி பண்புடையோரும் வளர வேண்டும் என்ற நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதே ஏழாலை மேற்கில் சித்தி விநாயகர் நூல் நிலையம்.

ஏழாலை பேனா மன்னர்களான இலங்கையர் கோனும் சி. வைத்திலிங்கமும் வளர்ந்த மண். சித்தாந்த மேதைகளாக அருளானந்தசிவம் (ஐ. பொன்னையா) கலாநிதி மு. ஞானப்பிரகாசம் கலாநிதி பண்டிதர் மு. கந்தையா வாழ்ந்த வாழ்கின்ற ஊர். இங்கு ஊர் மக்களின் ஊக்கத்துடனும் ஒத்துழைப்புடனும் 1985.08.18 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டதே இந்நூல் நிலையம். நூல் நிலைய செயற்பாட்டாரம்பத்தில் பலர் மிகவும் ஒத்துழைப்பாக இருந்தார்கள். ஊர் மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நூல்நிலையம் தனது ஆரம்பத்தை புத்தகக் கண்காட்சியுடன் ஆரம்பித்தது. பலதுறைசார்ந்த தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலுமான சுமார் ஏழாயிரத்திற்கு மேற்பட்ட பழைய புதிய நூல் [illegible]ர் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன. கண்காட்சியை அப்போதைய பிரதேச செயலர் அமரர். திரு [illegible] மகாலிங்கம் அவர்கள் திறந்து வைத்தார்கள்

நூல் நிலைய[illegible] வளர்ச்சி கருதிய சுமார் முப்பது பேர் சஞ்சிகைகள், பத்திரிகைகள், மாதவார இத[illegible]ள் புதினங்கள் என்பன கொள்வனவு செய்ய மாதாந்தம் உதவினர்.

சிறுவர் முதல் பெரியோர் வரை யாவருக்குமான நூல்கள் இருந்தமையால் பலரும் அங்கத்தவராயினர். க.பொ.த உ/த மாணவர்களின் சகல பாடங்களுக்குமான நூல்களும் மாதிரிவினாவிடைகளும் பயிற்சி நூல்களும் இருந்ததுடன் ஆய்வாளர்களுக்கான பல பழைய சஞ்சிகைகள் பத்திரிகைகள், இதழ்கள், விபரக்கொத்துக்கள் இருந்தன. 40 வித வார மாத காலாண்டு வருடாந்தம் எனப்பல தமிழ் ஆங்கில இதழ்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

இடப்பெயர்வு ஏற்பட்ட நேரத்தில் நூல்நிலையத்தின் முக்காற்பங்கிற்கு மேற்பட்ட சொத்துக்கள் அழிந்தொழிந்து போயின. கட்டடமும் சிதைவுற்றது. அங்கத்தவர்களும் சிதறுண்டு போயினர்.

மீள வந்தபின் சிற்சில திருத்தங்கள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு தற்போதைய நிலையில் நூல் நிலையம் இயங்கி வருகின்றது. இன்றைய குழும அங்கத்தவர்களின் முயற்சியினால் ஓரளவு தேடலர்களின் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றது.

மொத்தமாக இருநூற்றிமுப்பத்திநான்கு அங்கத்தவர்களைக் கொண்டது இந்நூல்நிலையம். தமிழ் ஆங்கிலம் என்ற வகையில் சிறுவர்களுக்காக 750 நூல்களும்,



**இ. கணேசராசா**
*ஓய்வுநிலை அதிபர், பொறுப்பாளர்*
*ஏழாலை சித்திவிநாயகர் நூலகம்*

உசாத்துணைப் பகுதியில் 370 (த), 120 (ஆ), நூல்களும் இரவல் கொடுக்கும் பகுதியில் 1500 (த) 325 (ஆ) நூல்களும் விசேட சேர்க்கைப் பகுதியில் 300 (த) உள்ளூர் தகவல் வளங்கள் 50 (த) நூல்களும் கொண்டுள்ளது.

தற்போது நவீன இலக்கியங்களைத் தேடி வருபவர்களுடன் கல்விப் பீடங்களில் கேட்கப்படும் விடயங்களையும் ஆய்வுக்கட்டுரைக்கான தகவல்களையும் தேடி வருபவர்களும் பலர் உள்ளனர். குறிப்பாக தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், சைவசமயம், பழைய நிகழ்வுத் தகவல்கள் போன்றனவற்றை நாடி வருபவர்கள் பலர்.

மனிதவாழ்வில் காணும் தொடர்பு சாதனங்களுள் நூல்களும் முக்கிய இடம் பெறுகின்றன. இது இலகுவாக யாராலும் கையாளத்தக்கது. வேறு எவ்வகையான சாதன உதவியும் இன்றி ஆரம்பத்தில் கற்ற அறிவின் அடிப்படையில் எக்காலத்தும் எங்கும் எச்சூழலிலும் நாம் தேவைப்பட்டவுடன் உபயோகிக்கக்கூடிய ஒன்று. எனவே நூல்களின் தேவை முக்கியமானது. வளரும் உலகின் உயரத்துக்கு நாம் நம்மை தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியமும் கட்டாயமும் ஆகும்.

ஆகவே எமது நூல்நிலையம் தனது செயலைச் சிறப்பாக்க வேண்டிய நிலையில் உள்ளது. நூல்களின் முக்கியத்துவத்தையும் இலகு வழிப்பயனையும் உணர்ந்து செயல்பட வைத்தல். இனத்தின் பெருமையை அவ்வின மொழிப் படைப்புக்கள் மூலமே அறியமுடியும் என உணர்ந்து நூல்களின் இனம் கண்டு வாசிக்க வைத்தல். பலதுறை பலமொழி நூல்களும் வழங்கும் வளர்ச்சி எம்மவர் வளர்ச்சிக்கு வழிகாட்டும் என்பதனை உணரவைத்தல். அறிவு என்பது நூல்களைக் கற்பதில் மட்டுமல்லாமல் வாழ்க்கையில் வகையாகவும் அமையும்போதே சிறக்கும் என்பதை உணரவைத்தல். நூல் நிலையத்தினால் அறிஞர் பலர் உருவாகுவதுடன் அருளாளர்களும் உருவாகவேண்டும் என்பதே நோக்கமாகும். இந்நோக்கங்கள் நிறைவேற நீண்டதூரப் பயணம் போக வேண்டி இருக்கும். ■

## புத்தகங்களின் பெருமை உணர்ந்து பெரியோர் சொன்ன
## பொன் மொழிகள்

- ☒ சில புத்தகங்கள் 'ருசி' பார்க்கப்படவேண்டியவை. சில புத்தகங்கள் விழுங்கப்பட வேண்டியவை!
- ☒ உலகில் சாகாவரம் பெற்ற, விலை மதிப்பில்லாத பொருட்கள் உண்டு. என்றால், அவை புத்தகங்கள் தான்!
- ☒ சிறந்த புத்தகங்களைப் படிப்பது, சென்ற நூற்றாண்டுகளில் வாழ்ந்த மிகச்சிறந்த மனிதர்களுடன் பேசுவதற்கு ஒப்பாகும்.
- ☒ சிறந்த புத்தகங்கள் 'நல்ல தாயாகவும், சிறந்த ஆசிரியராகவும், உற்ற நண்பராகவும்' இருக்கக் கூடியவை!
- ☒ என் மனதிற்குப் பிடித்த புத்தகங்களை என்னிடம் கொடுங்கள் வாழ் நாள் முழுவதும் சிறையிலிருக்கிறேன்!

தொகுப்பு:– செல்வி. சற்குணசிங்கம் – நளாயினி

# பன்னுதமிழ்
# சொன்னமன்னாகத்தான்
# சுன்னாகப் பண்டிதன் முருகேசன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

### ஆக்க இலக்கிய முயற்சிகள்

தோடஞ்ஞர் என்றும் இலக்கணக்கொட்டர் என்றும் அழைக்கப்படும் முருகேச பண்டிதர் கல்வியில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாதவராகத் திகழ்ந்தார். சைவசமயியாகவும் ஒழுக்கசீலராகவும், பக்தியாளனாகவும் விளங்கிய பண்டிதரின் ஆக்க இலக்கிய முயற்சிக்குத் தக்க சான்றாக சந்திரசேகரப்பிள்ளையார் ஊஞ்சல், சிவபூதராயர் ஊஞ்சல், மயிலணி மகாவிஸ்ணு ஊஞ்சல், மயிலணி சுப்பிரமணியர் ஊஞ்சல், வத்தாக்கை விசாலாட்சி அம்மை ஊஞ்சல் மயிலணிசிலேடை வெண்பா, குடந்தை வெண்பா, பதார்த்ததீபிகை, நீதிநூறு, விசாலாட்சி அம்மை பதிகம் போன்ற நூல்கள் விளங்குகின்றன. முருகேசபண்டிதரின் ஆக்கவிலக்கியப் படைப்புக்களை மூன்று அடிப்படையில் வகுத்து நோக்கலாம்.

1. பக்தி இலக்கியப் பனுவல்கள்
2. தருக்க நூல்
3. அறநூல்

பக்தி இலக்கியப் பனுவல்களை ஊஞ்சல், பதிகம், வெண்பாக்கள் என மேலும் பகுத்து நோக்கலாம்.

### பக்தி இலக்கியப் பனுவல்கள்

**ஊஞ்சற் பாடல்கள்**

ஈழத்துப் புலவர்களால் பெரிதுஞ் சிறப்பாகக் கையாளப்பட்ட பிரபந்தங்களுள் ஒன்று ஊஞ்சல் ஆகும். இது ஊசல், ஊஞ்சல், ஊசற்பாட்டு, பொன்னூசல் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. ஊசல் என்பது

**"ஒத்தமக்களைச் சுற்றம் பொலியச் சுகமொடுவாழ்க என உரைத்து,**
**ஆசிரிய விருத்தம் கலித்தாழிசை**
**என்னும் பாவகைகளில் ஆடீர் ஊசல்**
**ஆடோமோல் ஊசல்"**

என்னும் தொடர்கள் பாடலில் இடம்பெறும் வண்ணம் பத்துச்செய்யுட்களில் பாடப்படுவதாகும்" ஆயினும் தொன்னூல் விளக்கம் ஊஞ்சலில் வண்ணகம் வரலாம் என முதற்கண் உரைத்தது. முத்து வீரியம் என்னும் நூலே, "ஆடீர் ஊசல்", "ஆடாமோ ஊசல்" என்னும் தொடர்களின் பயிற்சியை முதலில் சுட்டிய நூலாகும். பிற்காலத்தில் ஈழத்தில் எழுந்த ஊசற் செய்யுட்கள் பல இதனடிப்படையிலேயே அமைந்தன எனலாம்.

**"ஆங்கவிருத் தத்தா லறைத்தகலித் தாழிசையால்**
**ஓங்கிய சுற் றத்தளவா யூசலாம்"**

என்னும் வெண்பாப் பாட்டியல் இலக்கணத்துக்கமைய முருகேசபண்டிதரால் பாடப்பட்டு எமக்குக் கிடைக்கும் ஊஞ்சற் பிரபந்தங்கள் ஐந்தாகும். இவை முறையே பிள்ளையார், சிவபூதவராயர், மகாவிஸ்ணு சுப்பிரமணியர், விசாலாட்சிஅம்மை போன்ற தெய்வங்கள் மீது பாடப்பட்டன. எவ்வித சேதமுமின்றி எமக்கு முழுமையாகக் கிடைக்கும் முருகேச பண்டிதரின் ஊஞ்சற் பாடல்களாக சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் ஊஞ்சல்,



சுன்னாகம் சிவபூதராயர் ஊஞ்சல், கந்தரோடை வத்தாக்கை விசாலாட்சியம்மை ஊஞ்சல் முதலானவற்றைக் கூறலாம்.

சுன்னாகம் மயிலணி சுப்பிரமணியர் ஊஞ்சல், காப்பு, நூல், வாழி, எச்சரீக்கை, பராக்கு, லாலி என்னும் பகுதிகளைக் கொண்டமைந்த போதிலும் "நூல்" என்னும் பகுதியில் பத்துப்பாடல்கள் இடம்பெறுவதற்கு பதிலாக ஒன்பது பாடல்களே எமக்கு கிடைக்கின்றன. இதனைப் போன்றே சுன்னாகம் மயிலணி மகாவிஸ்ணு ஊஞ்சலில் காப்புச் செய்யுள் நீங்கலாக நூல் என்னும் பகுதியில் ஐந்து பாடல்களே இடம்பெறுகின்றன. கு. முத்துக்குமாரசாமிப் பிள்ளையால் தொகுக்கப்பட்ட முருகேசபண்டிதர் பிரபந்தத்திரட்டில் இடம்பெறும் "கந்தரோடை வத்தாக்கை விசாலாட்சியம்மை ஊஞ்சலும்" பத்துப்பாடல்களால் ஆனது. எண்சீர் ஆசிரியவிருத்தத்தாலியன்ற இவ்வூசலில் காப்புச்செய்யுளும் இணைந்தே பத்துப்பாடல்களாகக் காணப்படுகின்றன. எனவே காப்புச் செய்யுளுமிணைய பத்துப்பாடல்களால் ஊஞ்சல் பாடும் மரபொன்றும் ஈழத்தில் இடம்பெற்றிருப்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.


சி. ரமேஷ்


சுன்னாகம் சந்திரசேகரப்பிள்ளையார், சிவபூதராயர் ஊஞ்சல்களின் காப்புச்செய்யுளில் பாடப்புகும் பாடல்களின் எண்ணிக்கையை வரையறுக்கும் முருகேசபண்டிதர் ஏனைய மூன்று ஊஞ்சல்களிலும் பாடப்புகும் பாடல்களின் எண்ணிக்கையை வரையறுக்கவில்லை. எனவே இலக்கணவிதிக்கமையாது இம்மூன்று ஊஞ்சல்களையும் பண்டிதர் பாடியிருக்க வாய்ப்புண்டு எனக் கருதுவாருமுளர். அவ்வாறில்லை யாயின் பண்டிதரால் இவ்வூஞ்சல்கள் முழுமையாகப் பாடப்பட்டு தொகுக்கப்பட்ட காலப்பகுதியில் பாடல்கள் சிதைந்துபோய் பிரபந்தத்திரட்டு ஆசிரியருக்கு கிடைக்கப்பெறாமல் போயிருக்கலாம்.

சந்திரசேகரப் பிள்ளையாரூஞ்சலைப் போன்றே சுப்பிரமணியர் ஊஞ்சலும் காப்பு, நூல், வாழி, எச்சரீக்கை, பராக்கு, என்னும் பகுதிகளைக் கொண்டமைந்த போதிலும், இவ்வூஞ்சலில் சந்திரசேகரப் பிள்ளையாரூஞ்சலிலிடம்பெறாத "லாலி" என்னும் பகுதி பாடப்பட்டுள்ளது. இறைநாமம், இறைஇயல்பு, இறைபராக்கிரமம் என்பன இசைய லாலி வரும் வண்ணம் இயைபொன்றத் தொடுத்து இதனைப் பாடியுள்ளார்.

**சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் ஊஞ்சல்**

குமரன் துதிக்க, பிரமன் கரம் கூப்ப, தாயார் உமையார் அன்புகூர, வணிகையர் கீதம்பாட, தேவர்கள் மலர்தூவ, இந்திரன் கவரிபுல்ல, கணநாதர் புடைசூழ, சித்திரபுத்தியர் மகிழ்ந்து கூட மறைநூல், சைவநூல் என்ற தூணில் விநாயகர் பலகை கட்டி ஊஞ்சல் ஆடுவதாக அமையும் சந்திரசேகரப் பிள்ளையாரூஞ்சல் அடியார்கள், விழாச்செய்வோர், மதில்தந்தோர், தளிபுதுக்கி பிரதிட்டை செய்த செல்வந்தர் வையத்தில் இன்னலின்றி வாழவேண்டு மெனவும் விநாயகரை வேண்டிப் பாடுகின்றது. கொன்றை மாலையைச் சூடிய விநாயகரின் தோற்றம்,

**"சடைமதியும் முக்கண்ணுந் தனிநூன் மார்புந்**
**தவளமதிக் குழவியெனத் தயங்கு கோடும்**
**இடைஅரவக் கச்சுமங்கை எழிலுஞ்சென்னி**
**இலங்குமுடி யுங்கவரி இசைத்த காதும்**
**புடைபெயர ஒளிவீசு நுதலின் ஓடைப்பொற்பும்**

எனச் சிறப்பித்துப் பாடப்படுகின்றது.

இவ்வூஞ்சலில் "வாழி" என்னும் பகுதியில் தரை, தவமறையோர், தனவசியர், பூவசியர், நிரை, மகளிர்பதி, விரதம், நிலமன்னர், மறைமுகில்கள், மூஷிகம், சித்தி புத்தி புனிதையர், சுன்னைநகர் போன்றன சிறந்தோங்கி வாழ வேண்டுமென வாழி கூறப்படுகிறது.

"எச்சரிக்கை" என்னும் பகுதியில் கழிவிரக்கம் பொங்க "தன் இடரைத் தீர்த்தருள வேண்டும்" எனப்பாடும் புலவர் அடியவருக்கு இறைவனே வந்திங்கு அருள் செய்ய வேண்டுமென்றும் விறலார் வினை தீர்த்து அவர்களையும் ஆட்கொண்டருள வேண்டும் எனவும் போற்றிப் பரவுகிறார்.

விநாயகரின் தோற்றம், புகழ், குண நலன்களை எடுத்துரைக்கும் விதமாக "பராக்கு" என்னும் பகுதியும் இவ்வூஞ்சலில் இடம்பெறுகிறது.

**சுன்னாகம் சிவபூதராயர் ஊஞ்சல்**

சுன்னைநகர் தெற்கில் எழுந்தருளியுள்ள சிவபூதராயர் மீது பாடப்பட்ட இவ்வூஞ்சல் காப்பு நூல், வாழி என மூன்று பகுதிகளை உடையது. காப்புச்செய்யுள் வெண்பாவால் அமைய "நூல்" "வாழி" ஆகிய பகுதிகள் எண்சீர் ஆசிரிய விருத்தத்தாலியன்றது.

விநாயகரைக் காப்புடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட இவ்வூஞ்சல் பாட்டுடைத் தலைவன் சிவபூதராயர் என்றும் பாடப்புகும் செய்யுட்களின் எண்ணிக்கை ஈரைந்தென்றும் வரையறுக்கிறது. "சிவபூதராயரே ஆடீர் ஊஞ்சல்" என்னும் தொடர் செய்யுளின் ஈற்றடிதோறும் வரும் வண்ணம் பாடப்பட்ட இவ்வூஞ்சல் உருவகச்சிறப்பும் வருணனை நயமும் கொண்டு விளங்குகின்றது.

**"பொன்னாரும் பவளமணித் தூண்க ளாலும்**
**பொற்புமிகும் வைரத்தின் வளையி னாலும்**
**மின்னாரும் தரளமணி வடத் தினாலும்**
**விலைமதியா மாணிக்கப் பலகை யாலும்**
**சுன்னாகந் தெற்குவாழ் வுறவே செய்த**
**சுடருமணி ஊஞ்சல்"**

என ஊஞ்சலின் பகுதிகள் உருவகித்துக் கூறப்படுகிறன. அக்கால மரபுக்கமைய வட்டுக்கோட்டைப் பிட்டியம்பதிப் பத்திரகாளியம்மை ஊஞ்சல் உட்பட பல ஊஞ்சல்கள் இத்தகைய உருவகப்பாணியிலேயே பாடப்பட்டுள்ளன.

பந்தரெலாம் மணிகள் தொங்க பக்கமெல்லாம் மாலைகள் துலங்க செம்பட்டால் வாழை தோரணங்கள் நாட்டி, சொர்க்கமெனச் செய் மணிமண்டபத்திலே சிவபூதராயர் ஊஞ்சல் ஆடும் காட்சி மிகத் தத்ரூபமாக எடுத்துரைக்கப்படுகிறது. தென் சுன்னை நகரின் இயற்கை வளத்தை பண்டிதர்

**"பொழியுமழை நெடுமுகில்கள் பொலிந்து மின்ன**
**மாவடிக்கண் மகளிரென மயில்கள் வன்ன**
**வாசம் விரித் தாடுமெழின் மலிந்து மன்ன**
**நாவடிக்கு மிசைகள்பல வண்டு பன்ன**
**நந்தவன மோங்கியதென் சுன்னை"**

என்னும் வரிகளுக்கூடாக மிகநுட்பமாகக் காட்சிப்படுத்துகின்றார்.

பூதலத்தோர், மழை, மறையவர், வணிகர், பசுநிரை, மகளிர்கற்பு, மறை, தொண்டர், திருப்பணி மேலோர் என பலருக்கு வாழ்த்துக்கூறும் "வாழி"



என்னும் பகுதியும் முருகேசபண்டிதரின் கவித்துவத்துக்கு தக்கசான்று பகர்கிறது.

**சுன்னாகம் மயிலணிச்சுப்பிரமணியர் ஊஞ்சல்**

பவளமணித் தூண்கள் நாட்டி, பைம்பொன்வளை விட்டம் ஓட்டி, தரளமணிக்கயிறு மூட்டி, அதில் ரத்னபலகை மாட்டி, அதன்மீது பாட்டுடைத்தலைவன் சுப்பிரமணியர் அமர்ந்திருந்து ஊஞ்சலாடுவதைச் சித்திரிக்கும் இவ்வூஞ்சல் விநாயகக் கடவுளைக் காப்புடைத் தலைவனாகக் கொண்டது.

**"அத்திமுகத் துத்தமனென் றரனார் தந்த**
**திருவேறு விநாயமுக் கண்ணன் பாதஞ்**
**சென்னிமிசை கொண்டுபவந் தீர்த்து வாழ்வாம்"**

எனக் காப்புக் கூறித்தொடங்கும் சுன்னாகம் மயிலணிச் சுப்பிரமணியர் ஊஞ்சலில், மயிலணி வாழ் வேலவரே ஆடீர் ஊஞ்சல்" என்னும் தொடர் செய்யுளின் ஈற்றடிதோறும் வரும்.

முருகப்பெருமான் திருவூஞ்சலாட, தேவர்கள் சேவகம் செய்யும் காட்சி நூற்றோறும் சிறப்பாகவும் நயக்கும் விதமாகவும் எடுத்துரைக்கப் படுகிறது. கண்ணன் கண்களித்துப்பாட, கனலிமதி கவிகை நீட, தேவர்கள் துந்துபி முழங்க, பவனன் (காற்று) ஆலவட்டம் எடுக்க, பானு தீபம் தூக்க அங்கைமலர் தூவி முனிவோர்களும், அமரர்களும் மறையோரும் வாழ்த்த கந்தருவர் இசைநறவஞ் செவியில் வார்க்க, மயிலணி வேலவர் ஊஞ்சலாடுவதாகப் பாடப்படும் ஒவ்வொரு செய்யுளும் சொல்நயமிக்கதாகவும் கவித்துவமுடையதாகவும் காணப்படுகிறது. முருகப்பெருமானின் திருவுருவக் காட்சி,

**"பன்னிருசெங் கதிர் ஆறாய் வந்த தென்னப்**
**பலமணிகள் மிளிருமுடி சிரமேல் துன்ன**
**மின்னுகுவி சாதிமலர்க் கரமேல் மன்ன**
**விரிகடகக் கரங்கள் ஈராறும் துன்ன**
**துன்னுமணித் தண்டைசதங் கைஎன்(று) இன்ன**
**சுடர்க்காலிற் கலின்கலினென்(று) ஒலித்து மின்ன"**

என்னும் வரிகளுக்கூடாக கற்றோரும் துதிப்போரும் உள்ளுணரும் வண்ணம் மிகத்தத்ரூபமாக காட்சிப்படுத்தப்படுகிறது. நூலின் செய்யுள்தோறும் மயிலணிவாழ் வேலவர் "வரைநடஞ்செய்காவலரே என்றும் வண்ணமணிக்கடம்பினரே என்றும், மங்கை உமைபாலகரே என்றும் வந்தவினை தீர்ப்பவர் என்றும், வன்னமயில் வாகனர் என்றும், வன்னமணிக்கடம்பினர் என்றும், மலரகிதபூரணர் என்றும், மந்திரதந்திரப்பொருளே என்றும்" சிறப்பித்துப் போற்றப்படுகிறார்.

நூலில் சந்நிதியின் நின்று நின்னடி சேவிக்கும் அடியவர்கள் வாழவும், நந்தவிலா வகை பூசை நடக்குமாறும் நற்பொருளீட்டும் உத்தமர் நயந்து வாழவும் கோயில் திருப்பணித் தொண்டர் சிறந்து வாழவும் நற்கருணை வேண்டிப் பாடும் செய்யுட்களும் இடம்பெறுகின்றன.

"வாழி" என்னும் பகுதி "மறை, மறையோர், வணிகர் வேளாளர், மயில், சேவல், வள்ளியம்மை தெய்வானையம்மை ஆகிய சக்திகள், நிறைவாழி மகளிர், முகில்கள், நெடுஞ்சுரபி, இனம், நிலம், பாட்டுடைத்தலைவன்

வீற்றிருக்கும் தலம் என்பன சிறப்புற வாழவேண்டுமென எண்ணி வாழி கூறி பாடப்பட்ட பகுதியாகக் காணப்படுகிறது.

அளவடியாக அமையும் "எச்சரீக்கை, பராக்கு, லாலி" என்னும் பகுதிகள் இறைநாமங்களுக்கூடாக இறைபெருமையையும் சிறப்பையும் எடுத்துரைக்கின்றன. "எச்சரீக்கை" என்னும் பகுதியிலிடம்பெறும் "தீர்த்தாண்டருள் தேவே" "வானோர் இறை மீட்டாண்ட என் வாழ்வே" என்னும் தொடர்களுக்கூடாக இறையோன் புலவர் துயர் களைந்த செய்தியும் துதி செய்து பாடிப்பரவுவாருக்கு எடுத்துரைக்கப்படுகிறது.

**சுன்னாகம் மயிலணி மகாவிஸ்ணு ஊஞ்சல்**

விநாயகரைக் காப்புடைத்தலைவனாகவும், மகாவிஸ்ணுவைப் பாட்டுடைத் தலைவனாகவும் கொண்டு பாடப்பட்ட மயிலணி மகாவிஸ்ணு ஊஞ்சல் எண்சீர் ஆசிரிய விருத்தப்பாக்கள் ஆறினைக்கொண்டு விளங்குகின்றது. அவற்றுள் முதல் விருத்தம் காப்புச் செய்யுளாகவும் இறுதி விருத்தம் வாழி கூறும் செய்யுளாக அமைய ஏனைய நான்கு செய்யுட்களின் ஈற்றடிகள் தோறும் மயிலணிவாழ் திருமாலே / ஆடீர் ஊஞ்சல்" என்னும் தொடர் வரும் வண்ணம் மகாவிஸ்ணுவின் புகழ் கூறி ஊஞ்சலாட்டுவனவாக அமைந்துள்ளன.

காப்புச்செய்யுளிலிடம்பெறும் முந்நான்கு அடிகளும் தலமமையப்பெற்ற இடத்தினையும் பின்னிரு அடிகள் காத்தற் கடவுள் மகாவிஸ்ணுவையும் ஈற்றடிகள் இரண்டும் காப்புடைத்தலைவன் விநாயகரையும் சுட்டி நிற்பதாக அமைகின்றன. மயிலணி வாழ் திருமால் ஏறி ஆடும் ஊஞ்சல்

**"பேசரிய மேருவெனத் தூண்கள் நாட்டி**
**பிறங்குமர கதப்பெரிய விட்டம் மூட்டி**
**தேசுலவும் தரளமணிக்கயிறு பூட்டி**
**செங்கனகத் தாலியலும் பலகை மாட்டி"**

என்னும் வரிகளுக்கூடாக சிறப்புற எடுத்துக் காட்டப்படுகிறது.

சந்திரனும் சூரியனும் கவிகை தாங்க சசிபதி செங்கர தலத்திற் கவரி ஓங்க அந்தணர்கள் மலர்தூவ அடியவர்கள் இடர்நீங்க விஸ்ணு ஊஞ்சலாடுவதைக் கூறும் புலவர் அவ்வாறு ஆடும்போது அவருடலில் மருவி நிற்கும் மணிமாலைகளும், சக்கரமும், சங்கும், வில், வாள் தண்டமும் கனகமணித்துகிலும் சேர்ந்து ஆடுவதையும் குறிப்பிடுகிறார். அடிமோனைத்தொடை ஒன்றிடத்தொடுக்கும் பண்டிதரின் ஊஞ்சல் பாடல்களில் 'மகாவிஸ்ணு ஊஞ்சலும்' குறிப்பிட்டு கூறத்தக்க ஊஞ்சல்களில் ஒன்றாகும். இவ்வூஞ்சலிலிடம்பெறும் நான்காவது செய்யுளில் "ஆட" என்னும் சொல்லொன்று அடிதோறும் இறுதிக்கண் ஒன்றி அடியியைபுத் தொடையாய் வரும் வண்ணம் புலவர் பாடியிருப்பதுவும் ஊஞ்சலுக்கு சிறப்புடையதாய் அமைகிறது.

**கந்தரோடை வத்தாக்கை விசாலாட்சியம்மை ஊஞ்சல்**

**"ஏர்பூத்த யானைமுகத் தொழிலே பூத்த**
**இறைவனடித் தாமரைகள் இறைஞ்சி ஏத்தி"**

என விநாயகருக்கு காப்புக்கூறித் தொடங்கும் கந்தரோடை வத்தாக்கை



விசாலாட்சியம்மை ஊஞ்சல் வாழி உள்ளிட்டு பதினொரு ஆசிரியவிருத்தச் செய்யுட்களாலானது.

முருகேச பண்டிதரின் ஏனைய ஊஞ்சல் பிரபந்தங்களைப் போலன்றி இவ்வூஞ்சல் பதிகத்தில், ஊஞ்சலின் தோற்றப்பொலிவு கற்றோர் இயைந்து பொருள் கொள்ளும் வண்ணம், இரு செய்யுட்களில் வெவ்வேறு விதமாகக் கூறப்படுகிறது.

"துதிமேவு ஞானமே தூண்களாக, துணையாகும் மூன்றும் நடங்கயிறாக, விதிமேவி அவற்றிடை விட்டமாக நிற்க, விளங்கும் ஓங்காரமே பீடமாக அமைய அதன்மீது வத்தாக்கை மாதுமையாள் ஏறி ஊஞ்சலாடுவதாகக் கூறும் புலவர் அவ்வூஞ்சல் ஐந்தெழுத்தின் தோற்றமாக விளங்கி மக்களுக்கு நற்கதியைப் பயக்குமென்றும் ஓர் செய்யுளில் குறிப்பிடுகிறார்.

**"மேருமலையை ஒத்த தூண்களை நாட்டி,**
**மண்டல கோள்கையின் விட்டமோட்டி**
**சீரியவர் அன்பின் அன்பென்னும் கயிரைப்பூட்டி,**
**புவியை நிகர்த்த பலகையை மாட்டி**
**பேரறிஞர் செய்த ஊஞ்சல்"**

என்று இரண்டாம் பாடலைப்போன்றே ஐந்தாம் பாடலிலும் ஊஞ்சலின் தோற்றப்பொலிவு பிறிதொருவிதமாகக் கூறப்படுகிறது.

மாதுமை அம்மை ஊஞ்சலாடும் காட்சி துதிப்போர் உவந்தேத்தும் வண்ணம் மிகச்சிறப்பாக ஊஞ்சல் எங்கும் காட்சிப்படுத்தப்படுகிறது. "கங்கை கவரி வீச, காளிகள் கைக்குடையுடன் கூட, பாவையர் துதிகள் பேச, அரம்பையர் நடனமாட, முரசு கணநாதர் மாட்ட தும்புரு நாரதர் யாழின் சுருதிமீட்ட கந்தருவ மகளிரிசை நாவால் மூட்ட, கமலினியும் அனுந்திதையும் வடம் தொட்டு ஊஞ்சலாட்ட அம்பாள் ஆடுவதாக அமையும் இப்பாடல்கள் பக்திச்சுவையும் சிறந்த கற்பனை வளமும் நிறைந்ததாகக் காணப்படுகிறன.

"காப்புச் செய்யுள், வாழி" நீங்கலாக வரும் ஏனைய அனைத்துச் செய்யுட்களின் ஈற்றடிதோறும் வத்தாக்கை மாதுமையே ஆடீர் ஊஞ்சல்" என்னும் தொடர் இணைந்துவரும் வண்ணம் பாடப்பட்ட இவ்வூஞ்சல் சொல் நயமிக்கதாகவும், சந்தநயமிக்கதாகவும் விளங்குகிறது. சுன்னாகம் மயிலணி மகாவிஸ்ணு ஊஞ்சலைப்போன்றே இவ்வூஞ்சலின் ஒன்பதாம் செய்யுளில்" ஆடீர் ஊஞ்சல் என்னும் சொல்லொன்று அடிஇயைபுத் தொடையாய் வரும் வண்ணம் பாடப்பட்டு உள்ளது.

இவ்வூஞ்சலின் "வாழி" என்னும் பகுதியில் புவி, நான்மரபு, மறை, ஆகமம், முகில், மகளிர், பதி, விரதம், பசு, வாய்மை, கருணை என்பன சிறப்புற வாழவேண்டுமென வாழி கூறப்படுகிறது.

ஊஞ்சலிலக்கணத்துக்கு அமைய முருகேசபண்டிதரால் பாடப்பட்ட ஊஞ்சல்கள் நன்கு திட்டமிட்ட முறையில் செவ்வனேயாக்கப்பட்ட ஊஞ்சல்களாக விளங்குகின்றன.

(வளரும்...)

# மண்ணின் இசை

"கூ.... கூ....." "கூக்கூ" இடைவிட்டு இடைவிட்டுக் காற்றில் கலந்தது விடிவெள்ளித் தம்பரின் அழைப்பு. விடியுமுன்னரே தோட்டத்துக்குப் போனால் தான் அன்றைய தண்ணீர் இறைப்பை முடித்துக்கொண்டு சந்தைக்கு மரக்கறி கொண்டுபோகமுடியும். குடிசைகளில் மின்னும் அரிக்கன்லாம்புகளின் ஒளி விடியலுக்கு வரவுகூறி மின்னின. அடிவானில், விடிவெள்ளி கண் சிமிட்டிக் கொண்டிருந்தது. முன்னாளில் தோட்ட வேலை செய்த களைப்பு இன்னும் தீராவிடினும், விடியுமுன்னரே தண்ணீர் இறைத்து விட வேண்டும். கிணறு மறுமுறை ஊறி அடுத்தநாள் இறைப்புக்கு ஆயத்தமாக வேண்டுமல்லவா.

மீண்டும் குரல் எழுப்பினார் "கூ..... கூ...." "கூக்கூ" மறுகூவல்கள் குடிசைகளில் இருந்து எழுந்தன. "கூ..... கூ....". தொடர்பாடலில் "கூ..... கூ...." ஒலி அக்காலத் தொலை தூரச்சமிஞ்ஞை தான். சின்னண்ணை சின்னத்துரையும் சதாசிவமும் தான் மறு குரலாளிகள். மயிலரும் வந்துவிட்டால் போதும் ஆளுக்கொரு வேலை பார்க்கலாம்.

விடிவெள்ளி தம்பரும் விடியுமுன்னே வந்தெழும்பி
பிடிகயிறு தொட்டு பின்னாலே ஏறிவந்து
மிதியுங்கோ துலாவையடா என்று கூறுவார்
துலாக்கொடி பிடித்திழுத்து ஓலைப் பட்டை கட்டி
தாட்டு தாட்டு தண்ணி கோலி பீலியிலே ஊத்திறார்
அணைதடி மேலேறி ஆழமடுவில் தாட்டு தாட்டு
தண்ணியை கோலி ஊத்திறார் - தன்னானே
தண்ணியை கோலி ஊத்திறார்.

நித்திரை கண்ணை அழுத்தினாலும், இருட்டு வேளையிலே துலாமிதிப்பது நிதானம் தவறக்கூடாத வேலை. ஆடுகாலில் சட்டிய பிடிகயிறு ஒன்றையே நம்பி, துலா அடிவரை சென்று திரும்பி பேண்தடி வரை மிதித்து வந்து துலாவை மேலும் கீழுமாக இயக்குவது சின்னத்துரையும் சதாசிவமும் தான். இருவரும் சீராக இயங்கினால் தம்பர் சீராக தண்ணீரைக் கோலி பீலியில் இறைப்பார்.

பட்டையின் அளவைப் பொறுத்து ஒருவரோ, இருவரோ துலாமிதிக்குப் போவார்கள். பேண்தடி ஆடுகாலில் உராய்வதால் ஏற்படும் 'கிறீச்' சத்தம், பீலியில் நீர் ஊற்றும் சப்தம் இவை. சீராகக் கேட்கும்போது, தொழிலில் ஈடுபாடு, களைப்பு இவற்றினூடு ஒருவித ரிதத்துடன் பாட்டுப் பிறக்கும். உழைப்பவனின் பாடல், மண்ணின் இசை, மக்களின் இசை, தொழில் சார்ந்து பிறக்கும் தெம்மாங்கு.

விடிவெள்ளி தம்பர் துலாக்கொடி பிடிக்க
சின்னண்ணை சதாசிவம் துலாவினை மிதிக்க
மடைவாய்க்கால் மயிலர் மறிச்சு திறக்க
தடையின்றி தண்ணி தலைமடை ஓடுதே
பட்டையிலே தண்ணி தாட்டு அள்ளு தம்பரண்ணை



கலைத்தாசன்

பேண்தடி யோடை பின்னடி மாத்தி
மறு வழத்தாலே ஈரடி மாத்தி
முறையடி மாத்தி முன்னாலே போறேன்
துலாக்கொடி தாட்டு தண்ணியை சேந்து

கோட்டான்கள் கூவைகள் குரலத்துப் போக
கோயிலு மணிகள் நாதங்கள் பேச
குயிலுகள் காகங்கள் கூவுற நேரம்
காலை கருக்கல் கிழக்காலே விடியுது
கடுகியே காலை வையடா பிழைக்காம
மடை வெள்ளம் மாறியே மயிலண்ணை மாயுது

பேரான பெரியம்பி பெருவாய்க்கால் போட
சீரான சின்னண்ணா சிறுவாய்க்கால் கீற
கதிரேசு குஞ்சி கைவாய்க்கால் இழுக்க
மோட்டு முதலியன் மூட்டுப் பிடிக்க
வள்ளி கிழங்கு நட வள்ளிப்பிள்ளை வாறா
மரவள்ளித் தடி ஊண்ட மயிலண்ண போறார்

விடியுது விடியுது சூரியன் உதிக்குது
வருகுது வருகுது தேத்தண்ணி வருகுது
தேத்தண்ணி வருகுது துலாவடிக்கு வாங்கோடா

தேத்தண்ணி மட்டுமே தேடி வருகுது
பெட்டியிலே காலை புட்டும் வருகுது
குரக்கன் புட்டோட இடிச்ச சம்பலும்
மாவடி மரவள்ளி கிழங்கு மசியலும்
புட்டோட குழைச்சு தின்னடா தம்பி
பனங்கட்டி கடியோட தேத்தண்ணி குடியடா

சுவையான தேநீர், இணக்கமான குரக்கன் புட்டு, மரவள்ளி மசியல், சம்பல் இனிப்பன இவை மட்டுமோ........ பாட்டும் தானே. ■

*தொழிலில் கவனமும் சிதறாது, பாட்டும் முறையோடு பாடும் அக்காலக் கிராமியப் பாடல்கள் காற்றோடு போய்விட்டன. வயல் வரப்புகளோடு நின்று விட்டன. இன்று தேடாப்பொருளாகி விட்டன பல. ஆனால் மண்ணின் இசை மகிமையை அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் இன்னும் ஒருசிலர் இல்லாமல் இல்லை தேடித் தொகுக்க விரும்புகின்றோம் தகவல் தந்தால் துணையாக இருக்கும்.*

**- ஆசிரியர் குழு**



# அகவரிகள்

மயிலணி, சுன்னாகம். செல்வி. ச. நளாகினி

பிரதேசத்தவரின் திறமைகளை வெளிக் கொணரச் செய்து, ஊக்கம் தரும் 'வெள்ளிமலை' யின் இதழ் 3 உலக புத்தக தினத்தில் வெளியானது சிறப்பாக அமைந்திருந்தது. இதேபோல் இலக்கிய தினமாகிய செப்ரெம்பர் 8இலும் வெள்ளிமலை சஞ்சிகை வெளியாக வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இதழ்கள் மிகத் தரமான முறையில் சுவையாக, பிரயோசனமான விடயங்களுடன் வெளியாகுவது மகிழ்ச்சியாவுள்ளது. இதழ் 3இன் அட்டைப்படம் பொருத்தமான முறையில் சிறப்பாக இருந்தது. தரிசனம் சிறுகதை சிறப்பாக அமைந்து எதிர்பாராத திருப்பத்தைத் தந்துவிட்டது. ஆசிரியர் திரு. ஆ. இரவீந்திரனுக்கு எனது பாராட்டுகள். தொடர்க தங்களின் பணி. பல தகவல்களுடன் சிறந்த அம்சங்களைத் தந்த படைப்பாளிகள் யாவரையும் பாராட்டுகின்றேன்.

உடுவில் S.S. ஆனந்தன்

வெள்ளிமலை இதழ் 3 வாசித்தேன். உங்கள் முன்னைய இதழ்களிலிருந்து மாறுபட்டு சிறப்பாக வெளிவந்துள்ளது. இடம்பெற்ற விடயங்களும் பாராட்டுக்குரிய விதத்தில் அமைந்திருந்தன.

'விண்ணின் அமுதம்' கட்டுரை பண்டிதர் சச்சியின் கவிதைகளைத் தேடிப்படிக்கத் தூண்டியது. கவிதை பற்றிய நயப்பும் சுவையாக அமைந்திருந்தது.

சுன்னாகம் நூலகத்தின் சேவைகள் சமுதாயத்துக்குக் காலங்காலமாகப் பயன் தருவிதமாக அமைந்து வருகின்றன.

உலக புத்தக தின விழா ஒருங்கமைப்பும் சிறப்பாக அமைந்திருந்தது. மாணவர்கள் பங்கேற்ற பட்டிமன்ற நிகழ்ச்சியில் அவர்களின் வாதத்திறமைகளையும் அவர்களை மதிப்பிட நடுவர் திரு. அனுசாந்தன் அவர்களின் பேச்சாற்றலையும் ஒருங்கே அறியக்கூடியதாக இருந்தது.


கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையேற்ற கவியரங்கில் இப் பிரதேசத்தின் புகழ்பெற்ற கவிஞர்கள் பங்கேற்றார்கள். தற்கால நடப்புகளினை நகைச்சுவையாகப் புட்டுவைத்து அதற்குள்ளும் வாசித்தலின் மேன்மையை எடுத்துக் கூறிக் கவிபாடினார்கள். மிகச் சிறப்பாக இருந்தது.

தொடர்ந்து இவ்வாறான நிகழ்வுகளை பிரதேச சபை முன்னெடுக்க வேண்டும். நூலகரின் தலைமையில் இடம்பெற்ற 'புத்தகம் தரும் வித்தகம்' வில்லுப்பாட்டு புதுமையான முயற்சி . அருமையாக இருந்தது. கலை நிகழ்ச்சிகளையும் காண வாய்ப்பளித்தது உலக புத்தக தின நிகழ்வுகள். இலக்கியவாதிகளுக்கும் கலைஞர்களுக்கும் வாய்ப்பளிக்கும் முயற்சிகள் தொடரவேண்டும்.

மல்லாகம் எஸ். ரி. அருள்

வெள்ளிமலை சஞ்சிகையானது தனது இதழ் விரிப்பில் புதிய சிந்தனையுடனும் கருத்துறவுடனும் மணம்பரப்பி வருகின்றது. இவ்வகையில் இதழியல் ரீதியாகவும், அதன் வடிவமைப்பு, உள்ளடக்கம், அதன் உள்ளீடான பேசு பொருள் என்பவற்றில் தனக்கேயான தனித்துவத்துடனும் சிறப்புடனும் வெளிவந்தமை இவ் இதழின் சிறப்பாகும். இது இலக்கிய உலகிலே புதிய சிந்தனையியல் ரீதியாகவும் கருத்தாடல் ரீதியாகவும் புதிய களம் படைக்கும் விதமாக அமைகின்றது எனில் மிகையில்லை. இவ்வகையில் இம்முறை புத்தகதினத்தினைப் பற்றியும் புத்தகச் சிறப்பினைப் பற்றியும் தகவல்களைத் தனக்குள் பொதிந்து நூல் உறவுத்தளத்தின் உண்மையினை உணர்ந்து கொள்ளும் வகையில் உயிரோட்டமாக வெளிப்படுத்தி நிற்கிறது.





# தேர்த்திருவிழா

தேர்த்திருவிழா சிறப்பும் தெய்வீகமும் நிறைந்த பெருவிழாவாகும். "வேதங்கள் தேரில் சுவாமியைத் தரிசனம் செய்வது பிறவித்துன்பங்களை நீக்கும் என்றுரைக்கின்றன". மகோற்சவ நாட்களில் முக்கியம் பெற்றதாக தேர் உற்சவம் அமைகின்றது. ஐந்தொழில் தத்துவங்களில் தேர் உற்சவமானது அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. தேரின் அமைப்பை உள்ளகத்தே ஆராய்ந்து பார்ப்போமாயின் அதனுடைய முழுத் தோற்றமுமே அக்கினியின் அமைப்பை ஒத்ததாக காணப்படுகின்றது. ஈசனின் திருக்கரத்தில் ஏந்தியிருக்கும் அக்கினி சம்ஹாரத்தை (அழித்தல்) குறிக்கின்றது.

திரிபுர தகனம் தேரிலே எழுந்தருளி மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அதற்கான சம்பவத்தை நோக்கும்பொழுது ஆதிக்காலத் திலே விருயுத்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்ற அசுரர்கள் மூவரிருந்தனர். இவர்கள் சிவனைக் குறித்து நீண்டகாலம் கடும் தவமியற்றி இரும்பு, பொன், வெள்ளி என்னும் மூன்று உலோகத்தால் அமைந்த கோட்டைகளையும் மூன்று ஐங்கம புரங்களைப் பெற்று அப்பட்டணங்களோடு அந்தரத்தெழுந்து தமக்கு விரும்பிய இடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள பட்டணங்கள் மீது அமர்ந்து அங்கு வசித்தவர்களைத் துன்பம் செய்து வந்தனர். இக்கொடுமைகளைக் கண்ட காத்தல் கடவுளாகிய விஷ்ணு நாரதரைத் திரிபுர அசுரரிடம் ஏவி பாஷண்ட மதத்தை உபதேசித்து சிவன்மீது அவர்கள் கொண்ட மட்டற்ற பக்திக்குத் தீங்கு விளைவித்தார். அதனால் திரிபுர அசுரர்களைச் சிவன் அழிக்க நினைத்து ஓர் இரதத்தை தேவர்களைக் கொண்டு அமைப்பித்தார்.

இயற்கையில் உள்ள பொருட்களையெல்லாம் அதில் பொருத்தி அமைத்தார்கள். மந்திரகேசரி மலைகள் அச்சாகவும் சூரிய சந்திரர்கள் சக்கரமாகவும் ஆறு ருத்துக்களை சக்தியாகவும் பதினான்கு லோகங்களும் தட்டுக்களாகவும், ஆகாயம் ஆசனமாகவும் உதயாத்தமள மலை விதானமாகவும் மோட்சலோகம் மேல் விரிவாகவும், யாகங்கள் சட்டங்களாகவும் நாள் முதலியன இடுக்கு மரமாகவும் அட்ட மலைகள் தூண்களாகவும், அட்ட யானைகள் தாங்குவனவாகவும் சப்த சமுத்திரங்கள் திரைச்சீலைகளாகவும் கன்ம ஞானேந்திரியங்கள் கலன்களாகவும், வேதாங்க உபாயங்கள் மதுதர்ம சாஸ்திரங்கள் மணிகளாகவும் வாயுக்கள் படிகளாகவும் நான்கு வேதங்கள் பூட்டப்படும் குதிரைகளாகவும் அமைக்கப்பட்ட இரதத்திலே இறைவன் எழுந்தருளி கங்கை முதலிய தேவமாதர்கள் சாமரம் இரட்டவும் மகாமேருமலையை வில்லாகவும் சரஸ்வதியை வில்லிற் கட்டிய மணியாகவும், வாசுகியை நாணாகவும் விஷ்ணுவைப் பாணமாகவும் அக்கினியை அம்பின் நுனியாகவும் வாயுதேவனை அம்பிறகாகவும் கொண்டு சாரதியாகிய பிரமா பிரணவமாகிய தூண்டுகோல் கொண்டு செலுத்த இறைவன் முப்புரங்களையும் பார்த்தார். புன்னகை புரிந்தார். முப்புரங்களும் எரிந்து மறைந்தன.

முப்புரம் என்பது வெறுமனே மூன்று கோட்டைகளைக் குறிப்பதன்று. முக்குணங்களைக் குறிக்கின்றது. சத்துவ குணத்தின் வெண்மையை வெள்ளிக் கோட்டைக்கும் ரஜோ குணத்தின் செம்மை நிறத்தை தங்கக்கோட்டைக்கும். தமோ குணத்தின் கருமையை இரும்புக்கோட்டைக்கும் கூறுகின்றனர். முப்புரமென்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலகாரியங்கள். அவற்றை நீறாக்கி தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்னும் மூன்று அசுரர்களையும் அடிமையாகக் கொண்டு தம்பதமருளி இன்பம் கொடுத்தார் இறைவன். மும்மல வலி நீக்கமே முத்திப்பேற்றுக்குரிய தகுதி என்னும் சிந்தனையைத் திரிபுரதகனம் என்னும் சிவபெருமானின் அருட்செயல், உருவக முறையில் விளக்குகின்றது. இதனைத் திருமூலர்

**"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்**
**முப்புரஞ் செற்றனன் என்பார்கள் மூடர்கள்**
**முப்புர மாவது மும்மல காரியம்**
**அப்புரம் எய்தமை யாரறி வாரே.**

என்று கூறுகின்றார். மனித உடலினை உருவகிக்கும் வகையில் தேர் அமைந்துள்ளது. பிரபஞ்சப் பொருட்களெல்லாம் மானுட சரீரத்தில் உண்டு. இந்திரியங்கள் அனைத்தும் தேவர்கள் எனப்படுகின்றன. தேருடைய சிங்காசனமே மனித இருதயத்தின் பிரதியம்சம் எனவும் கூறப்பட்டுள்ளது.

சிவனருளால் சிவஞானம் உண்டாகும்போது முக்குணம் சக்தி இழந்து போகின்றது. சீவாத்மா சிவத்தில் ஒன்றுபடுகிறது. முற்றிலும் பக்குவப்பட்ட ஜீவாத்மாவுக்கு பரஞானம் கைகூடுகிறது. மானிட சரீரமே ரதம் எனக் கூறப்பட்டது. அது சிவஞானத்திற்குப் பிறகு பயனற்றதாகிறது. சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி எனும் மூன்று அவஸ்தைகளே முப்புரமெனவும் இறைஞானம் கிடைத்ததும் இம்மூன்றும் மாயமாய் மறைந்து போகின்றன. எனவும் இவைகளுக்கு மூலகாரணமாகிய சத்துவ, ராஜோ, தாமச முக்குணங்கள் அழிவதில்லை எனவும் அவை பிரகிருதி மாயையாய் பரவஸ்துவுக்கு வாயில் காப்பாளராகக் கீழ்நிலையிலிருக்கின்றன எனவும் கொள்ளப்படுகின்றது.

சைவப்புலவர்
எஸ்.ரீ.குமரன்

ஆலயத்தில் வணங்குவோர்க்கு காட்சியளிக்கும் இறைவன் ஆலயத்தினுள் சென்று வணங்காதவர்களுக்கும் காட்சியளிப்பதற்காக தேரில் எழுந்தருளுகின்றார். கோவிலினுட் சென்று இறைவனைக் காண முடியாதவர்களும் இரதத்திலே எழுந்தருளும்போது பார்த்துப் பரவசமடைய முடிகிறது. அன்றையநாளில் ஆலயத்தில் நடைபெறும் சகல கிரியைகளும் மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைகின்றன. உற்சவங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் இவ் உற்சவம் அமைகின்றது பதினான்கு உலகங்களின் உருவமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கும் தேரில் சுவாமி எழுந்தருளியதும் அது ஓடுவது உலகினை இறைவனே இயக்குகின்றார் என்பதன் அறிகுறியாகும்.

இத்தகைய தேர்த்திருவிழா நடைபெறுவதற்கு யாவரினதும் பங்கேற்பின் தேவை உள்ளது. தேரை அசைப்பதற்கு பலர் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டியிருப்பதால் பலரின் ஒற்றுமைச் சின்னமாகவும் தேர்த்திருவிழா விளங்குகின்றது. தேர்த்திருவிழாவைத் தரிசிப்பது சிவபுண்ணியப்பேறு. ■



## வலி தெற்கு பிரதேச சபையின் 2008 உலகபுத்தகதின விழா "புத்தகம் தரும் வித்தகம்" வில்லிசை நிகழ்வும் சில பாடல்களும்



மெட்டு: **பாவாடை தாவணியில் பார்த்த உருவமா?**

பனையோலை பைப்பிரஸில் பார்த்த நூலெல்லாம் - இன்று
இறுவட்டு இணையமென உலவி வருகுது
அனைவருமே படிக்கும் விதம் மாறிய தேனோ
இனிதான நூல்களை நாம் மறந்ததும் ஏனோ... (பனையோலை)

கறையான்கள் அரித்து நூல்கள் மறைந்துவிட்டாலும் - ஓர்
கடல்வந்து காவு கொண்டு அள்ளிச் சென்றாலும்
இரக்கமற்ற அரக்கர் தீயை அள்ளி வைத்தாலும் - ஓர்
இரவில் கூட எழுந்து நிற்கும் நமது நூல்களே (பனையோலை)

பண்பாடு பேணும் மக்கள் குறைந்துவிட்டாலும் - நாம்
படித்தவர்கள் விருப்பு கொண்டு சொல்லி வைத்தாலே
எதிர்கால சமுதாயம் எழுச்சி காணுமே - நூல்
எழுதுதலும் வாசித்தலும் வளர வேணுமே (பனையோலை)

மெட்டு: **சஹாரா பூக்கள் பூத்ததோ**

நூல்தானா இவ்வுலகில் சிறந்ததோ
அதானா அறிவைக் கொடுப்பதோ
கல்வியை வழங்கிடும் நூல்களே - அடடா
அந்த மெய்ப்பொருள் கண்டிட உதவிடும்
அது உன்னுடன் நட்பு கொண்டிடும்
கதையோ கவியோ வேறு லக்கியமோ
ஓராயிரம் ஆண்டுகள் வாழ்ந்திடும் நூல்கள் இது
நூறாயிரம் ஆண்டுகள் தாண்டியும் வாழும் இது..... (நூல்தானா)

## நூல் அறிமுக விழாக்கள்



12.07.2008இல்
திரு. பொ. சண்முகநாதன்
(சண் அங்கிள்) எழுதிய
நகைச்சுவை இலக்கிய
முன்னோடிகள் நூல்
அறிமுகவிழா சுன்னாகம்
ஸ்கந்தா கல்லூரி
மண்டபத்தில் நடைபெற்றது.

10.08.2008இல்
கலாபூஷணம்
சு. துரைசிங்கம் எழுதிய
எங்களுக்காக நூல்
அறிமுகவிழா சுன்னாகம்
கதிரமலைச்
சிவன்கோவில் கல்யாண
மண்டபத்தில்
நடைபெற்றது.






24.08.2008இல்
திரு. சு. ஸ்ரீகுமரன்
எழுதிய
செல்லையாத் தாத்தாவும்
செல்லக்குழந்தைகளும்
நூல் அறிமுகவிழா
சுன்னாகம்
பொதுநூலகத்தில்
நடைபெற்றது.



# காற்று

**இயல்வாணன்**



ஆடும் ஓடும் சுழன்றிடும்
அகப்பட்டதைத் தூக்கிடும்
பாடும் கூடும் தேடிடும்
பாரில் எங்கும் சென்றிடும்

இலையை மரத்தை அசைத்திடும்
இன்பந் தனை ஊட்டிடும்
வளியின் அசையும் வடிவமாம்
வண்ண முகிலை ஓட்டுமாம்

வாடை கச்சான் சோழகம்
வகை வகையாற் காற்றுகள்
தேடிக் காற்று வாங்குவோம்
தெம்மாங்கு தான் பாடுவோம்.

ஐஸ் பழம், ஐஸ் சொக்
ஐஸ் கிறீம், ஸ்பெசல் மற்றும்
குளிர்பான வகைகளுக்கு
நாட வேண்டிய இடம்
காஜீவரஸ்
கிறீம் ஹவுஸ்
டாக்டர். சுப்பிரமணியம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக)
சுன்னாகம்

இளம் சாதனையாளர்கள். விளையாட்டு. கல்வி. பேச்சு. ஓவியம். இசை. வேறு கலை முயற்சிகளில் பிரதேச. மாவட்ட. மாகாண. தேசிய மட்டங்களில் கலந்து கொண்டு பரிசு பெற்றவர்களின் சாதனை விபரங்கள் புகைப்படங்கள் என்பவற்றை அனுப்புங்கள். கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்ட சாதனைகளாக இருந்தால் சிறப்பு. பாடசாலை மாணவர்கள் அதிபர் ஊடாகவும். ஏனையோர் உங்கள் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தலுடன் வெள்ளிமலை. சுன்னாகம் பொதுநூலகம். சுன்னாகம். என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

### படியுங்கள்: பரிசு

பின்வரும் ஐந்து கேள்விகளுக்கு இவ் இதழின் உள்ளேயே பதில்கள் உள்ளன. O/L வகுப்புகளுக்கு உட்பட்ட மாணவர்கள் படித்துப் பதில்களை பின்வரும் படிவத்தில் நிரப்பி அனுப்பினால் பரிசு உண்டு. படமும் பிரசுரமாகும்.

விடைகள் 31.10.2008க்கு முன் *வெள்ளிமலை சுன்னாகம் பொதுநூலகம் சுன்னாகம்* என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

(01) பத்திரிகை மடிக்கும் இயந்திரத்தைக் கண்டு பிடித்த இரு ஆங்கிலேயர்கள் யாவர்? ........................................................................................

(02) பின்வரும் முதுமொழியைப் பூர்த்தி செய்க?
"நாலு இடங்களில் ....................................................................வாங்கு"

(03) வீட்டில் வில்லங்கப்படுபவர் யார்? (கமலன்/விமலன்)
(சரியான விடையின் கீழ் கீறிடுக)

(04) சுன்னாகம் சிவபூதராயர் ஊஞ்சல் பாடியவர் யார்?
........................................................................................

(05) உலக புத்தக தினம் எது?..................................................................

## மின்வெட்டு

இன்னநாள் இன்னநேரம் இதுவரும் என்றில்லை
என்னபொழுதோ எதனாலோ எங்கேயோ - என்றுமில்லை
அன்னதன்மை யதனாலே எம் மாவட்டத்து
மின்னும் மரணமும் நேர்.

*- வாசகபாரதி*



**படியுங்கள்; சுவையுங்கள்; பகிருங்கள்.**

**"உலகத்தில் மக்களது அறிவு விருத்திக்குக் காரணமாயுள்ளவை நூல்களேயாகும். இந்நூல்கள் நீதிகள், ஒழுக்கங்கள் முதலியவற்றைக் கூறுவனவும், கதை ரூபமாக அவற்றை விளக்குவனவாக இருவகைப்படும். தீவிர அறிவு வாய்ந்தவர்களுக்கேயன்றிச் சாதாரண அறிவுள்ள பொதுமக்கள் எவர்களுக்கும் நீதி நெறிகளை நேரே கூறும் நூல்களிலும் பார்க்கக் கதைகள் மூலமாக அவற்றைக் கூறும் நூல்கள் எளிதில் உணரக்கக்கூடியனவாயிருக்கலாம். அதுபற்றியே முற்காலத்தில் புராணங்களும் காப்பியங்களும் அறிஞரால் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் அவைகள் செய்யுள் வழக்கிலே இருந்தமையால் அவற்றைப் பொதுமக்கள் அறியும்படி விளக்கூறவும், அவ்வறிவுள்ள மற்றொருவரின் உதவி வேண்டப்படுவதாய் இருந்தது. இதனால் பிற்காலத்தில்..... வசனரூபத்திலும் நூல்கள் ஆக்கப்படுவனவாயின. கற்பிதங்களாக எழுதப்படும் நூல்கள் தற்போது 'நவல்' என்னும் ஆங்கிலப் பதத்தால் வழங்கப்படுகின்றன.**

***– சி. வை. தாமோதரம்பிள்ளை, காந்தமலர்***
**கொக்குவில், 1936. பதிப்புரை.**


ஒரு சிந்தனை மாற்றம் ஏற்பட வேண்டும். உலர் வலயத்திலே, காணியிலும் பார்க்கத் தண்ணீர் ஓர் அரிதான வளமாகவுள்ளது. பாசனமற்ற நிலைமைகளில் மழை நீருக்கான உரிமையைக் காணி பெறுகிறது. ஏக்கருக்குள்ள விளைச்சலையும் குறிக்கிறது. பாசனம் உள்ள நிலைமைகளில் இவ்வாறு இருக்காது. மாறாக, தண்ணீர் காணியை விஸ்தரிக்கும். அதாவது விளைவிக்கப்படும் காணியின் விஸ்தீரணம் வழங்கப்படும் தண்ணீரையே பொறுத்துள்ளது. அதிக தண்ணீர் அல்லது அதிக சொட்டாகப் பாவிக்கப்படும் தண்ணீர், பயிர்காணி விஸ்தீரணத்தைக் கூட்டும். இதன்படி புதுக்காணிகளிலேனும் அல்லது ஏற்கனவே உள்ள நிலங்களில் பன்முறையேனும் பயிர்செய்கை விரிவடைகின்றது. கமக்காரர்கள் "ஏக்கருக்கு என்ன விளைச்சல்" என்ற அடிப்படையில் சிந்தித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் கமத்தொழிலுக்குத் திட்டம் வகுப்பவர்களும் தேசிய நலனைக் கருத்திற் கொள்பவர்களும் விளையும் பெருக்கம், விளைச்சல் அளவு போன்றவை தண்ணீர்க்கூறு ஒன்றுக்கு எவ்வளது எனச் சிந்திக்கத் தலைப்பட வேண்டும்.

நன்றி : கமநலம்

# KKJ


## WORKSHOP & SALE CENTRE

பதிவு இல J/ DS/ BR/ 989



ஏம்மிடம்


- பாடசாலைத் தளபாடங்கள்
- அலுவலகத் தளபாடங்கள்
- சிறுவர்களுக்கான விளையாட்டுத் தளபாடங்கள்
- உருக்கு, மரத் தளபாடங்கள்
- வீட்டுத் தளபாடங்கள்



***நீங்கள் விரும்பிய வடிவங்களில்***

***உங்களுக்கு ஏற்ற தரங்களில் தளபாடங்களை***

***செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்***



**K.K.J Workshop & Sale Centre**

இல. 11, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 0779037203





வெள்ளிமலை

சஞ்சிகைக்கு

எங்களின் மனப்பூர்வ நல் வாழ்த்துக்கள்

**உங்களின் சகல**

**விதமான அரைவை**

**வேலைகளுக்கும்**

**நம்பகமான ஸ்தாபனம்**

# சபரிநாதன் ஆலை

புகையிரத நிலைய வீதி,

சுன்னாகம்.

